




















21ம் ஆண்டில்...
27 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN

# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எதிரொலிக்கும் கதிர் வேகம் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

Canada's Other Voices

$1.00

416-752-1524 | www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1508 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday February 28, 2025

# Ontarians re-elect Premier Doug Ford's Conservative Government for another term.

# ஒன்ராரியோவின் பெரும்பான்மை வாக்காளர்கள் டக் போர்ட் அவர்களை முதல்வராகக் கொண்ட கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கத்தை பெரும்பான்மைப் பலத்தோடு ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்


டேவிட் சிமித்


அரிஸ் பபிகியன்


ரேமன் சோ


விஜய் தனிகாசலம்


லோகன் கணபதி



**ஒவ்வொரு கட்சியும் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை:**

**Ontario PC: 80    NDP: 27    Liberal: 14    Green Party: 2**

**(ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**

நேற்று 27ம் திகதி வியாழக்கிழமையன்று நடைபெற்ற கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திற்கான தேர்தலில் பெரும்பான்மையான வாக்காளர்கள் டக் போர்ட் அவர்களை முதல்வராகக் கொண்ட கொண்ட கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அரசாங்கத்தை பெரும்பான்மைப் பலத்தோடு மீண்டும் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.


மெரிட் ஸ்ரைல்ஸ்


டொலி பேகம்

நடைபெற்று முடிந்த தேர்தலில் ஆளும் கட்சியாக "குயின்ஸ்பார்க்" மாகாணப் பாராளுமன்றத்தில் விளங்கப்போகும் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி மொத்தம் 124 ஆசனங்களில் 81 ஆசனங்களைக் கைப்பற்றி பெரும்பான்மை அரசாங்கத்தை அமைக்கும் மக்கள் அணையைப் பெற்றுள்ளது.

மேலும், மீண்டும் இயங்கவுள்ள ஒன்றாரியோ குயின்ஸ்பார்க் பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கவுள்ள என்டிபி கட்சியின் தலைவர் மெரிட் ஸ்ரைல்ஸ் அவர்கள் பாராளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக தொடர்ந்து ஆளும் கட்சியின் நடவடிக்கைளையும் திட்டங்க-ளையும் கவனித்து அவை தொடர்பான விமர்சனங்களை அவ்வப்போது மாகாணப் பாராளுமன்றத்தில் முன் வைப்பேன் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதே நேற்று இரவு 10.00 மணிக்கு பின்னதாக ரொறன்ரோ காங்கிரஸ் சென்றர் மண்டபத்தில் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய முதல்வர் டக் போர்ட் அவர்கள் தனது உரையில் "எனது ஆணையை ஏற்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்கள் கனடாவிற்கு எதிராகவும் ஒன்றாரியோவிற்கு எதிராகவும் மேற்கொள்ளவுள்ள பொருளாதார "தாக்குதல்களை" முறியடிக்க கடுமையாகப் போராடுவேன்" என்று உறுதியளித்தார்.

நடைபெற்று முடிந்த ஒன்றாரியோவின் தேர்தலில் ஸ்காபுறோ மற்றும் மார்க்கம் நகரங்களில் போட்டியிட்ட கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளர்களான லோகன் கணபதி (மார்க்கம் தோர்ண்ஹில் ), விஜேய் தணிகாசலம்(ஸ்காபுறோ ரூஜ்பார்க் ) றேமண்ட் சோ (ஸ்காபுறோ வடக்கு ), அரிஸ் பாபிகியன் (ஸ்காபுறோ அஜின்கோர்ட் ) டேவிற் சிமித் (ஸ்காபுறோ மத்தி) ஆகிய தொகுதிக்களுக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும். என்டிபி கட்சியின் வேட்பாளராக ஸ்காபுறோ தென் மேற்கு தொகுதியில் போட்டியிட்ட டொலி பேகம் அவர்களும் தமிழ் மக்களின் ஆதரவோடு மீண்டும் பிரதான எதிர்க்கட்சியின் சார்பில் வெற்றிபெற்று. பாராளுமன்றத்தில் தனது குரலை ஒலிக்கச் செய்யவுள்ளார்.







இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இதுவரையில் முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை

**- பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு**

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி அமைத்துள்ள ஒன்பது கட்சிகளின் அணியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் ஒன்றாக இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்துடன் தமிழரசியல் கட்சிகள் சிலவும், தமிழரசியல் கட்சிகள் சிலவற்றுடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமும் பேசி வருகின்றது. எனினும், இத்தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இதுவரையில் எவ்வித முடிவுகளையும் எடுக்கவில்லை என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி அமைத்துள்ள அணியில் பசுமை இயக்கமும் இடம்பெற்றுள்ளதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ள நிலையில் அதுபற்றி பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் ஜே.வி.பி கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இவ்வெற்றியைத் தமிழ்த்தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள ஒரு பின்னடைவாகவும், உள்ளூராட்சித் தேர்தலிலும் ஜே.வி.பி வெற்றி பெற்றால் அது தமிழ்த்தேசிய அரசியலுக்கு மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஜே.வி.பி எப்பாடுபட்டேனும் தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்றிவிடவேண்டும் என்று தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. அண்மையில் அரசாங்கம் வெளியிட்ட பாதீட்டு அறிக்கை இதனைத் தெளிவுபடுத்துகிறது. இவற்றைக் கருத்திற்கொண்டு தமிழ்த்தேசிய அரசியற் கட்சிகள் சில கூட்டணி அமைத்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அக்கறை காட்டி வருகின்றன.



பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கட்சிகள் பெற்ற பின்னடைவு கட்சிகளின் பிளவினால் மாத்திரம் ஏற்பட்ட ஒன்று அல்ல. யுத்தத்துக்குப் பின்னரான இளைய தலைமுறையிடம் தமிழ்த்தேசிய அரசியலின் இருப்புக் குறித்துக் கட்சிகள் எடுத்தியம்பாததே பிரதான காரணமாகும். தமிழ்த்தேசியக் கட்சிகளின் வேட்பாளர்கள் சிலர் தாங்கள் அமைத்துள்ள கூட்டணிக்கும் மக்களுக்கும் விசுவாசம் இல்லாது பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சேவகம் செய்யும் நோக்கில் அந்நிறுவனங்களிடம் இருந்து பலகோடி ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு தேர்தலில் இறங்கியமையும், அரசிடம் இலஞ்சமாக மதுபான அனுமதிப் பத்திரங்ளைப் பெற்று விற்றுச் சம்பாதித்தமையும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கட்சிகளின் ஒற்றுமை முயற்சிக்கு ஒருபோதும் எதிரானது அல்ல. எனினும், கூட்டு என்பது தேர்தலில் ஆசனங்களை மாத்திரம் குறியாகக் கொண்டிராது கொள்கை அடிப்படையில் அமைய வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். ஜே.வி.பி வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதற்காக அரசியல் தரகர்களையும், தமிழ்த்தேசிய எதிராளிகளையும் ஆதரிப்பது தமிழ்த்தேசியத்தை மேலும் பலவீனமடையச் செய்யும். இது உண்மையான தமிழ்த் தேசியவாதிகளின் வெற்றி வாய்ப்பையும் பறித்துவிடும். இவற்றைக் கருத்திற்கொண்டே பசுமை இயக்கம் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான உபாயங்களை வகுக்கும். இதுபற்றிய முடிவுகளைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மக்களுக்குத் தானே அறியத்தரும் என்றும் தெரிவித்துள்ளார்.

# வவுனியா பல்கலையில் தொழில்வாய்ப்பிற்கான தலைமைத்துவப் பயிற்சி



இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனங்களினால், வவுனியா பல்கலைக்கழகத்தில் தொழில் வழிகாட்டல் அலக-ின் ஒருங்கிணைப்புடன், ஐந்து நாட்கள் "தொழில்வாய்ப்பிற்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை" நடாத்தப்பட்டது. ஆங்கில மொழி மூலம் நடாத்தப்பட்ட இப்பயிற்சிப்பட்டறையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிகக் கல்விப் பீடத்தைச் சார்ந்த சிங்கள, முஸ்லீம் மற்றும் தமிழ் மாணவர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 35 மாணவர்கள் பங்குபற்றி தலைமைத்துவம் மற்றும் தொழில்முறை திறன்கள் தொடர்பில் பங்கேற்றல் முறையில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இந்தப் பயிற்சி பல்கலைக்கழக மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்பிற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது எனலாம். பயிலுனர்கள் இப்பயிற்சியில் தங்களது வாண்மைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பிலும், தொழில்ரீதியாக தயார்படுத்துவதிலும் ஊக்கமெடுத்து, தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார்கள். ஒவ்வொரு பயிலுனரும் தமது வாழ்வின் அர்த்தம் (இகிகாய் - ஜப்பானிய சொல்) பற்றி சிந்தித்து, சுயவிருத்தி திட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தார்கள்.

நீண்ட கால அடிப்படையில் தொடர் கண்காணிப்புடன் ஒரு வருட நிகழ்ச்சித்திட்டமாக செயற்படுத்தப்பட்டு, மாணவர்களை சிறந்த திறன் கொண்டவர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பயிற்சியில், பயிலுனர்கள் ஐந்து குழுக்களாக செயல்பட்டு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளனர். தொழில் முயற்சியாண்மை, மரம் நடுதல், தொழில்நுட்பம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற சமூக செயல் திட்டங்களை எதிர் வரும் ஒரு மாத காலப் பகுதியில், தொழில் வழிகாட்டல் அலகின் ஆலோசனையில் வெவ்வேறு தளங்களில் அமுலாக்கம் செய்ய உள்ளனர். இவ்வாறு, இந்தப் பயிற்சியின் மூலம், சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வினையூக்கியாக பயிலுனர்கள் செயல்பட்டு, சிறந்த தலைவர்களாகவும், சமூகத்திற்குப் பயனுள்ள நற்பிரஜைகளாகவும் தங்களை வெளிப்படுத்த உள்ளனர்.

பயிற்சி பட்டறையின் இறுதி நாளில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், பல்கலைக்கழக உபவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான மதிப்பிற்குரிய. அற்புதராஜா அவர்களின் கரங்களால் அனைத்து பயிலுனர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பின்னூட்டலின் போது, முவின மாணவர்களும் உட்படுத்தப்பட்டு ஆங்கில மொழியில் இப்பயிற்சி வழங்கப்பட்டதை பயிலுனர்கள் பெரிதும் வரவேற்று பாராட்டினர்.





# காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனின் கதியை அறியாமலேயே வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த மற்றுமொரு தமிழ்த் தாய் காலமானார்




வடக்கில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது காணாமல் போன தனது புதல்வருக்கு நேர்ந்த கதி என்னவென்பதை வெளிப்படுத்தக் கோரி சுமார் எட்டு வருடங்களாகப் போராடிய மற்றுமொரு தமிழ்த் தாய் பதில் தெரியாமலேயே உயிரிழந்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைக் கண்டுபிடிக்க சுமார் 3,000 நாட்கள் போராட்ட களத்தை ஆக்கிரமித்த "மாரியம்மா" என அழைக்கப்படும் வேலுசாமி மாரி, தனது 79ஆவது வயதில் 24ம் திகதி திங்கட்கிழமை தினம் காலமானார்.

வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த தாயின் புதல்வரான வேலுசாமி சிவகுமார், கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட போரில் காணாமல் போனதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மே 2009 இல் உள்நாட்டுப் போர் இரத்தக்களரியுடன் முடிவடைந்ததிலிருந்து, தமது கணவர், மகள்கள், மகன்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்களை தமிழர் தாயகப் பிரதேச மக்கள் தேடி வருவதோடு, பெப்ரவரி 20, 2017 முதல் எட்டு வருடங்களைக் கடந்து போராடும் பெற்றோர்களில் குறைந்தது 350 பேர் இறந்துள்ளனர்.

தமது அன்புக்குரியவர்களின் தலைவிதியை வெளிப்படுத்தக் கோரி, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவத்துடன் தமிழ்த் தாய்மார்கள் முன்னெடுத்த போராட்டம் அண்மைக்கால வரலாற்றில் தெற்காசியாவின் மிக நீண்ட போராட்டமாக கருதப்படுகிறது.

தமிழ்த் தாய்மார்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்ததன் பின்னர் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகத்தால் (OMP) கடந்த 7 வருடங்களாக ஒரு காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் தலைவிதியையேனும் வெளிப்படுத்த முடியவில்லை.

அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் தமது அன்புக்குரியவர்களுக்கு நீதியை வழங்குவதற்கான எந்த சமிக்ஞையையும் வெளியிடவில்லை எனவும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த வாரம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிரான பாகுபாடு ஒழிப்பு குழுவில் (CEDAW) பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுடறிய போராடும் தமிழ் தாய்மார்கள் பற்றி எதுவும் கூறவில்லை.

இலங்கை அரசால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பான உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் தண்டனையின்மையை அனுபவிக்கவும் வரப்பிரசாதங்களைப் பெறவும் அனுமதித்தமைக்காக நாட்டை ஆளும் அரசாங்கங்கள் சர்வதேச அளவில் விமர்சிக்கப்பட்டுள்ளன.

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் போட்டியிடவுள்ள பிரதான தமிழ் பேசும் வேட்பாளர்கள் தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் வாக்களிக்க வேண்டும்

இலங்கையில் நீண்ட நாட்களாக அரசியல்வாதிகளாலும் மக்களாலும் எதிர்பார்க்கப்பட்டு வந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் தொடர்பான அறிவிப்புக்கள் விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் தீவின் நான்கு திசைகளிலும் அரசியல் கட்சிகளுக்கு பின்னால் நின்று "சுகபோகங்களை - அனுபவித்தவர்களும், எவ்வித ஊழல்களும் அற்ற
அரசியல் நோக்கோடு மக்கள் சேவையாற்றவென துடிப்போடு அரசியலில் ஈடுபாடு கொண்ட அன்பர்களுமாக பலர் "தூசு தட்டிக் கொண்டு" எழுந்து நிற்பதை நாம் எங்கிருந்தாலும் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது

ஓரே சின்னத்தின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் உள்ளிட்ட மொத்தம் ஒன்பது கட்சிகள் ஒன்றிணைந்து வரப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் போட்டியிடும் நோக்கோடு அந்த கூட்டை தொடரால் என்று எதிர்வு கூறப்பட்டது. ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளோடு கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியும் இந்தக் கூட்டுக்குள் அடங்கும் என்று கூறப்பட்டது.மேலும், முன்பு தமிழரசுக் கட்சிக்குள் இருந்த சரவணபவன், தவராசா ஆகியோரின் சுயேச்சைக் குழுவும் இந்த கூட்டுக்குள் வருவதாகக் கூறப்பட்டது.

இந்த முயற்சிகளும் ஒன்று மற்றதற்கு ஆதரவாக இல்லை என்று கருதத்தக்க விதத்தில்தான் நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை உருவாகிய கூட்டு தேசிய மக்கள் சக்திக்கு எதிரானது மட்டுமல்ல கஜேந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான உறவிற்கும் எதிரானதா என்ற கேள்விக்கு விடை மிக முக்கியம். எனவே இரண்டு கூட்டுக்களையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், தமிழ்த் தேசிய வாக்குகளை அவர்கள் ஒன்று திரட்டுவார்களா அல்லது சிதறடிக்கப் போகிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் அண்மையில் கூடிய சில அன்பர்கள் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும்போது மிகுந்த அவதானத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் குறிப்பான வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றால் அதன் முதல்வர் வேட்பாளராக அமர்த்தப்பட வேண்டியவர்களில் முக்கியமாக அருந்தவபாலன மற்றும் அவரைப் போன்று நேர்மையாகச் செயற்பட்டு தோற்கடிக்கப்பட்டவர்களின் பெயர்கள் கவனிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது

இது தொடர்பாக மேலும் கிடைக்கும் தகவல்களின்படி, மன்னாரைச் சேர்ந்த சிவகரனும் காணப்படுகிறார். இவரும் மன்னாரில் மக்கள் நலன் தொடர்பான விடயங்களில் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது ஏற்கனவே இது தொடர்பாகச் சந்தித்துப் பேசியிருப்பதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.

அருந்தவபாலன் கூட்டமைப்புக்குள் இருந்தபொழுது சுமந்திரனால் அவமதிக்கப்பட்டு அதிலிருந்து வெளியேறியவர்.அவருக்கென்று தென் மாராட்சியில் வாக்கு வங்கி ஒன்று உண்டு. ஆனால் அவர் பெருமளவுக்குத் துடிப்பாகச் செயல்படாத ஒரு பின்னணியில், அவருடைய வாக்கு வங்கி தொடர்ந்து பலமாக உள்ளதா இல்லையா என்ற சந்தேகங்கள் உண்டு. இப்படிப் பார்த்தால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக தமிழ்க் கட்சிகள் புதிய ஒருங்கிணைப்புக்களை நோக்கிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டன. இந்த விடயத்தில் சற்று முன்கூட்டியே தமிழ்க் கட்சிகள் சிந்தித்திருப்பது சாதகமானது.

ஆனால் மேற்படி ஒருங்கிணைப்பு முயற்சிகளும் சந்திப்புகளும் எதைக் காட்டுகின்றனவென்றால், தமிழ்த் தேசிய வாக்குகளை ஒன்றிணைப்பதற்கு கட்சிகள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும் என்பதைத்தான். எவ்வாறாயினும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் சுமந்திரன் மற்றும் ஸ்ரீதரன் சிவஞானம் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் கொண்டுவரப்போகின்ற வேட்பாளர்கள் தொடர்பாகவும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணத்தில் "மக்கள் நலன் விரும்பிகள் அவதானமாக இருப்பதாகவும் அறியப்படுகின்றுத. ஏனெனில் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்ற சில அர சியலை தமது சொந்த நலனுக்காகவும் வர்த்தக முயற்சிகளுக்காகவும் பயன்படுத்தி வருவதை மக்கள் சுட்டிக்காட்டியுள்ளதை சம்பந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும் என்றும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.!

# எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் "சாந்தன் துயிலாலயம்" அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.





(ந.லோகதயாளன்)

எள்ளங்குளம் துயிலுமில்லத்தில் 28ம் வெள்ளிக்கிழமை காலை 09 மணிக்கு, சாந்தனின் புகழுடல் விதைக்கப்பட்ட இடத்தில், சாந்தனின் குடும்பத்தினரால் உருவாக்கப்பட்டுள்ள "சாந்தன் துயிலாலயம் " தாயாரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.
அரசாங்கங்களாலும், அரசியலாலும், சட்டத்தாலும் , கடவுள்களாலும் 33 ஆண்டுகள் ஏமாற்றப்பட்ட ஒரு தாயின் ஏமாற்றங்களின் அடையாளமாக உருவாக்கப்பட்டுள்ளது

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில், கைதாகி சுமார் 32 வருடங்களுக்கு மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டு
விடுதலையான சாந்தன், திருச்சி சிறப்பு முகாமில் குடிவரவு சட்டத்தின் கீழ் கடந்த 2023ஆம் ஆண்டு முதல் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கால பகுதியில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் திகதி காலமானார்.
சிறையில் இருந்து விடுதலையான பின்னர் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவரை , மீள இலங்கைக்கு அழைத்து வர குடும்பத்தினர் சுமார் ஒன்றரை வருட காலமாக போராடி அவரது உயிரற்ற உடலையே இலங்கை கொண்டு வந்து அவரது சொந்த ஊரில் விதைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
இவ்வாறு உயிரிழந்த சாந்தனிற்கு தற்போது துயிலாலயம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

## கனடா, நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க குளிர்கால ஒன்றுகூடல் - 2025 !

**கனடா, நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் எதிர்வரும் மார்ச் முதலாம் தேதி சனிக்கிழமையன்று மாலை 6 மணிக்கு இந்த ஆண்டுக்கான குளிர்கால ஒன்றுகூடலைச் சிறப்பாக நடத்தவுள்ளது.**

**நிகழ்வு நடைபெறும் இடம்: J&J Swagat Convention Centre 415 Hood Road # 22 Markham**

**நடேஸ்வராக் கல்லூரிப் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.**

**தொடர்புகளுக்கு:**
(647) 807-9357 (647) 299-7443 (416) 402-1372

## Town House வாடகைக்கு உண்டு

ஸ்காபுறோவில் **McLevin/Tapscott** சந்திப்புக்கு அருகில் உள்ள **Town House** உடனடியாக வாடகைக்கு உண்டு.
**2 Bed Rooms - 1.5 Wash Room, 1 Parking** ஆகியவை உண்டு.
**Shopping Mall** மற்றும் தமிழர் கடைகள் மிக அருகில்..
மேலதிக விபரங்களுக்கு 416-844-1447 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

## Condo Room For Rent

**One Room available immediately in a Condo Near Warden and Finch**

**Please contact 647 648 8822 ( Ranji )**

**Working lady preferred**

## Room For Rent

**Orton Park/Ellesmere சந்திப்பிற்கு அருகில் 1 Bedroom Basement அனைத்து வசதிகளுடன் வாடகைக்குண்டு. Close to T.T.C , School. Separate Entrance ஆண்கள் விரும்பத்தக்கது தொடர்புகளுக்கு: 647-928 0667**

# மன்னார் மறை மாவட்டத்தின் 4வது ஆயராக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பேரருட்திரு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் அருட் பொழிவு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் மறை மாவட்டத்தின் 4வது ஆயராக தெரிவு செய்யப்பட்ட பேரருட் திரு. அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் 22ம் திகதி அன்றைய தினம் சனிக்கிழமை ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த மண்ணின் மைந்தரான பேரருட்திரு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக தெரிவு செய்யப்பட்ட நிலையில் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மடு திருத்தலத்தில் வைத்து ஆயராக அருட்பொழிவு செய்யும் நிகழ்வு நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மறை மாவட்டத்தின் தற்போதைய ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அபிஷேக நிகழ்வு மற்றும் திருப்பலி இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பிறைன் உடைக்வே ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் காடினல் ரஞ்சித் ஆண்டகை, மற்றும் இலங்கையின் அனைத்து மறைமாவட்ட ஆயர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் பல நூற்றுக்கணக்கான அருட்தந்யைர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், வடமாகாண ஆளுனர், நீதிபதிகள், திணைக்கள தலைவர்கள், அரசியல் பிரதி நிதிகள், இந்திய உயர்ஸ்தானிக அதிகாரிகள் உள்ளடங்களாக பல ஆயிரக்கணக்கான மக்களும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மன்னார் மறைமாவட்டத்தின் 4வது ஆயராக மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த பேரருட் திரு. அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 14ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

பரிசுத்த பாப்பரசரினால் புதிய ஆயருக்கான நியமனம் வழங்கப்பட்டது. அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை மன்னார் மறை மாவட்டத்தின் தற்போதைய ஆயராக உள்ள மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை விடுத்திருந்தார்.



இந்த நிலையிலே 22ம் திகதி அன்றைய தினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மறைமாவட்டத்தின் 4வது புதிய ஆயராக அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அடிகளார் அருட்பொழிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த தவறியுள்ளது

## மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றச்சாட்டு



- எஸ்.ஆர்.லெம்பேட்

தமிழக அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த தவறியுள்ளது. என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 24ம் திகதி திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ச்சியாக கைது செய்து வருகின்றனர். இலங்கை அரசை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிற நிலையிலே இலங்கை கடல் பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

குறித்த கைது நடவடிக்கைகள் ஊடாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை கட்டுப்படுத்தப் படுகின்றதா? என்ற விடையம் கேள்விக்குறியாகவே இருக்கிறது. நாங்கள் தொடர்ந்தும் இந்திய மீனவர்களுக்கு தெரிவித்து வருகின்றோர். தொடர்ந்தும் எமது கடல் எல்லையை தாண்டி வராதீர்கள், என்ற விடையத்தை அழுத்தமாக தெரிவித்துள்ளோம்.

இந்திய அரசுக்கும் தெரியப்படுத்தி உள்ளோம்.தமிழக அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கை கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த தவறியுள்ளது.

எல்லை தாண்டும் சம்பவத்தை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் மீன் பிடி சிட்டையில் குறிப்பிட்டுள்ளார்கள் இந்திய கடல் எல்லையை தாண்டாதீர்கள் என்று. ஆனால் அவர்கள் விதி முறைகளை மீறி இந்திய கடல் எல்லையை தாண்டி இலங்கை கடல் எல்லையில் வந்து எமது கரையோர பகுதிகளில் மீன் பிடித்து விட்டுச் செல்கின்றனர்.

அத்துடன் மீறி நுழைகின்ற நிலையிலே தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படுகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை அத்துமீறி நுழைந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த 32 மீனவர்களின் நிலையை நாங்கள் நினைக்கின்ற போது உண்மையில் வேதனையாகவே உள்ளது.சக மீனவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் கைதிற்கு நாங்கள் வேதனை அடைகிறோம்.

எனினும் கடற்படை முன்னெடுக்கும் கைது நடவடிக்கைகளை நாங்கள் எதிர்க்க முடியாது. குறித்த நடவடிக்கை மூலமாகவே எமது கடல் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. கடற்படையினர் இரவு பகல் பாராது எமது கடல் வளத்தை பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு மீனவர்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழக அரசு மீனவர்கள் விடையத்தில் அக்கறை செலுத்த வேண்டும். எல்லை தாண்டு வதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது எல்லை தாண்டும் இந்திய மீனவர்களுக்கு தமிழக அரசு தண்டனை வழங்க வேண்டும். எதிர்காலத்தில் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதை விடுத்து எல்லை தாண்டும் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

எதிர் காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப் படும் சம்பவங்கள் இல்லாமல் போக வேண்டும். அதற்கான தீர்வு இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையை தாண்டாமல் இருப்பதே ஒரே தீர்வு. அவர்கள் இத் தொழில் முறையை கை விட்டு, இலங்கை எல்லையை தாண்டுவதையும் அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது மன்னார் பனங்கட்டுகொட்டு மீனவ சங்கத்தின் பொது முகாமையாளர் அன்ரனி சங்கர், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கங்களின் பிரதேச சமாச தலைவர் அகஸ்டஸ் றோச் ஆகியோரும் கலந்து கொண்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கருத்துக்களை முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி தொடர் உண்ணாவிரத போராட்டத்தை அறிவித்த ராமேஸ்வரம் மீனவர்கள்

- எஸ்.ஆர்.லெம்பேட் (25-02-2025)

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மற்றும் மண்டபம் மீன்பிடி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்கச் சென்று எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் மற்றும் கடந்த இரண்டு நாட்களுக்கு முன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ள 32 மீனவர்களை படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர்கள் வரும் வெள்ளிக்கிழமை 28ம் திகதி முதல் தங்கச்சிமடத்தில் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட போவதாக மீனவர்கள் ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்துள்ளனர்.

முன்னதாக கடற்படையின் தொடர் கைது நடவடிக்கையை கண்டித்து காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவித்து இரண்டாவது நாளாக ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

தமிழ்நாடு மாநிலம் ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 32 மீனவர்கள் அவர்களின் அதி நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் 5 படகுடன் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினரால் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



தலை மன்னார் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையிலே குறித்த மீனவர்களை விடுதலை செய்யக் கோரி காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவித்து இன்று இரண்டாவது நாளாக ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாபெரும் இசைப் போட்டி!

## தென்னிந்திய இசைக் கலைஞர்களை தாண்டி சுதேசிய இசைக் கலைஞர்களை வளர்ப்பதே இந்த போட்டியின் நோக்கம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் இசைக் கலையகத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நாடாளவிய ரீதியிலான இசைப் போட்டியானது யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தில் நாளை காலை ஆரம்பிக்கபடவுள்ளதாக அதன் தலைவர் செல்வரவிசங்கர் தெரிவித்தார்.

குறித்த போட்டியானது இலங்கையில் வாழுகின்ற 16 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்ட இசை ஆர்வலர்களை வெளிக்கொண்டு வரும் முயற்சியாக அமைந்துள்ளது. பல இசைக்கலைஞர்கள் இலை மறை காயாக மறைந்துள்ள நிலையில் அவர்களை வெளியுலகிற்கு எடுத்து காட்டும் முயற்சியாக இந்த போட்டி அமைந்துள்ளது.

குறித்த போட்டி நிகழ்வுகளில் ஏற்கனவே விண்ணபித்தவர்களும் அதுதவிர போட்டி தினமாகிய 26ம் திகதி புதன்கிழமை புதிதாக இணைய விரும்புபவர்கள் அன்றையதினம் நேரடியாக போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.



இதேவேளை 26ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் இடம்பெறவுள்ள போட்டிகளில் தெரிவு செய்யபடுவோர் அடுத்த போட்டிகளுக்கு அழைக்கப்படுவர். இறுதிப்போட்டி ஏப்ரல் மாதமளவில் இடம்பெறும்.

குறித்த போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறும் மூன்று வெற்றியாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும். மேலும் தென்னிந்திய இசைக் கலைஞர்களை தாண்டியும் சுதேசிய இசைக் கலைஞர்களை வளர்ப்பதே இந்த போட்டியின் நோக்காக உள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில் தொற்றுநோய் விழிப்புணர்வு நடை பவனியும், பரிசளிப்பு விழாவும்!



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில், AIA காப்புறுதி நிறுவன அனுசரணையில் பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளின் வழிகாட்டலுடனான தொற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு நடை பவனியும், பரிசளிப்பு விழாவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் யோ.திவாகர் தலமையில் 25ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று காலை 7:30 மணியளவில் ஆரம்பமானது.

முதல் நிகழ்வாக நெல்லியடி மாலிசந்தி பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து நடை பவனியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மண்டபம் வரை சென்று அங்கு மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தொடர்ந்து வரவேற்பு நடனம், வரவேற்புரை என்பன இடம்பெற்றதனை தொடர்ந்து கருத்துரைகளை சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட மாவட்ட தொற்றுநோய் தடுப்பு பிரிவு வைத்திய நிபுணர் சு.சிவகணேஸ், வடமராட்சி கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் மோ.தெய்வேந்திரா, கரவெட்டி பிரதேச உதவி பிரதேச செயலர் திருமதி. சிவகாமி உமாகாந்தன், பிரதம விருந்தினராக கபந்துகொண்ட யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன், AIA காப்புறுதி நிறுவன வடக்கு கிழக்கு மாகாண முகாமையாளர் க.செல்வராஜன், நெல்லியடி AIA காப்புறுதி நிறுவன முகாமையாளர் ரகுபரன், ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து தொற்றுநோய் தொடர்பாக நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்காக பரிசில்களை நிகழ்வின் பிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் வழங்கி கௌரவித்தனர்.





இந்நிகழ்வில் AIA காப்புறுதி நிறுவன அதிகாரிகள், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை விசேட வைத்திய நிபுணர்கள், மருத்து அதிகாரிகள், தாதிய உத்தியோகஸ்தர்கள், உட்பட்ட உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் கபந்துகொண்டு சிறப்பித்தனர்.



கனடிய செய்திகள் Canadian News

# "எமது மொழியினதும் பண்பாட்டுக் கோலங்களினதும் தொன்மையை ஆசிரியப் பெருந்தகைகளோடு இணைந்து கொண்டாடுவதில் நாம் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும்"

## ஒன்றாரியோ தமிழாசிரியர்கள் சங்கத்தினர் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" நிகழ்வில் உரையாற்றிய "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்











ஈழத்தமிழர்களாகிய நாம் மாத்திரமல்ல, உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவருமே தங்கள் ஆசிரியர்களையும் பெற்றோரையும் மதிக்கின்றவர்களாக விளங்குகின்றார்கள். எனவே இன்றைய "தமிழர் மரபுரிமை மாதம்" நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கின்ற ஒன்றாரியோ தமிழாசிரியர்கள் சங்கத்தினர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரோடு இணைந்து கொண்டாடுவது மிகவும் உகந்ததான காரணமாக விளங்குகின்றது. இவ்வாறான விழாவில். எமது மொழியினதும் பண்பாட்டுக் கோலங்களினதும் தொன்மையையும் இன்று வரையிலுமான தொடர்ச்சியையும் ஆசிரியப் பெருந்தகைகளோடு இணைந்து கொண்டாடுவதில் நாம் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும்".

இவ்வாறு கடந்த ஒன்றாரியோ தமிழாசிரியர்கள் சங்கத்தினர் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய "கனடா உதயன்" பிரதம ஆசிரியரும் கனடா - பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உபு தலைவருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் புகழாரம் புகழாரம் சூட்டினார்.

ஸ்காபுறோவில் அமைந்துள்ள Wexford Collegiate School for Arts உயர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் ரொறன்ரோ கல்விச் சபையின் தலைவரும் அரசியல் பிரமுகருமான நீதன் சண் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் அழைக்கப்பெற்றிருந்தார்.

ஒன்றாரியோ தமிழாசிரியர்கள் சங்கத்தின் தலைவி திருமதி. ஹனிசியா கொட்வின் தலைமை தாங்கினார். சக ஆசிரியப் பெருந்தகைகளும் மேடையில் பல பணிகளுக்காக அழைக்கப்பெற்றார்கள்.

ஆரம்பத்திலிருந்து மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் உரைகளும் இடம்பெற்றன. அவற்றை சபையில் அமர்ந்திருந்த பெற்றோர் மற்றும் சக ஆசிரியைகள் ஆகியோர் உணர்ந்து ரசித்த வண்ணம் இருந்தனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், "இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் வெளியே புலம் பெயர்ந்த தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்து வரும் கனடாவில் மூன்று வகையான அரசாங்கங்களும் ஏற்றுக் கொண்டு அங்கீகரித்த தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டங்கள் தற்போது உலகின் பல நாடுகளின் அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பெற்று ஒவ்வொரு வருமும் ஜனவரி மாதத்தை தமிழர் பெருவிழாவாக கொண்டாடும் பெரும் பாக்கியத்தைப் பெற்றுள்ளோம்.

தன் அடிப்படையில் எமது மொழி சார்ந்த மற்றும் பண்பாடு சார்ந்த சாதனைகளும் அடையாளங்களும் பாதுகாக்கப்படுவது காலத்தின் தேவையாக உள்ள விடயமாகும்.

அதனடிப்படையில் தற்போதிருக்கும் எமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் கருவிகளாக இளம் சமூகத்தினர் மத்தியில் இவ்வாறான விழாக்கள் நடத்தப்பெறுவது அவசியமாகும். ஒன்றாரியோ தமிழாசிரியர் சங்கத்தினரும் இந்த விழாவை நடத்துவதன் மூலம் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் இயங்கிவருவது பாராட்டுக்குரியது" என்றார்.

"சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நீதன் சாண் அவர்கள் தனது உரையில் எமது மொழியையும் அதன் வழிவந்த கலை இலக்கியம் மற்றும் பண்பாட்டின் விழுமியங்களை கொண்டாடவும் அதற்காக நாம் வாழும் கனடாவின் அரச மட்டத்தில் பெற்றுக்கொண்ட உயரிய அங்கீகாரமும் எமது மொழியின் பெருமையை தக்க வைத்துக் கொள்ளும் வீரியம் கொண்டவையாக விளங்குவதை நாம் பெருமையோடு பார்க்க வேண்டும்" என்றார்.

தொடர்ந்து, ஆசிரியப் பெருந்தகைகள் நீதன் சாண் அவர்களால் கேடயங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்கள். ஒரு முழுமையான தமிழ்ப் பண்பாட்டு விழாவாக அன்றைய நாளில் ஒன்றாரியோ தமிழாசிரியர் சங்கத்தினர் நடத்தியமை பாராட்டுக்குரியது.


**அதிஷ்டம் காத்திருக்கிறது வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்**

**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும்**

**உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025**



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

**15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்**



**முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 30,000.**

**இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000.**

**மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.**

**நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.**

**ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.**

**10 பாராட்டுப்பரிசுகள் இலங்கை ரூபா தலா - 5000.**

**குரு அரவிந்தனின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி**. குறைந்தது **2 புதினங்கள்** அல்லது **4 சிறுகதைகள்** பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவர்களாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாகவெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும். உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய **கடைசி நாள்: 31. 03. 2025**

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: : kurufanclub@gmail.com

இணையம்: : https://kurunovelstory.blogspot.com/, http://tamilaram.blogspot.com/

https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை நண்பர்களுடன் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

**செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com**

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தாதியர்கள் போராட்டம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதியர் சங்கத்தினர் 27ம் திகதி அன்றையதினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் சங்கத் தலைவர் தர்மகுலசிங்கம் பானுமகேந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், 27ம் திகதி இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் எமது சங்கம் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளோம்.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட நடைமுறையின் படி தாதியர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு அளவு உட்பட சில கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் பதவி உயர்வு காலநிலை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சுகாதார ஊழியர்களை முழுமையாக பாதிக்கும் ஒரு செயற்பாடாக உள்ளது. தாதியர்கள் மிகவும் வேலை பழுக்கும் மத்தியில் இரவு பகலாக வேலை செய்துவரும் நிலையில் இந்த நடவடிக்கை அவர்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதியாகும்.

இந்த அநீதிக்கெதிராக அகில இலங்கை ரீதியாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த போராட்டத்தில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக தாம் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

# வலி. வடக்கில் பல்வேறு பகுதிகளுக்கும் திடீர் கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டு ஆளுநர் நா. வெதநாயகன்!




வலி. வடக்கில் பல்வேறு பகுதிகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் திடீர் கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்டார்.

வலி. வடக்கில் மக்கள் பாவனைக்கு கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வசாவிளான் கிழக்கு, வசாவிளான் மேற்கு, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு ஆகிய 5 கிராம அலுவலர் பிரிவுகளும் மக்கள் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலைமை இன்னமும் காணப்படுகின்றது.

பாதுகாப்புத் தரப்பினரின் வேலி பின்நகர்த்தப்படாமையால் இவ்வாறான சூழல் நிலவுகின்றமை தொடர்பில் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன் இந்தப் பகுதியிலுள்ள பலாலி சித்தி விநாயகர் பாடசாலையின் இடிபாடுகளுடன் கூடிய கட்டடத்தையும் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து கடந்த காலங்களில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தின் மைதானத்தின் ஒரு பகுதி பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ளதையும் ஆளுநர் சென்று பார்வையிட்டார்.

மயிலிட்டித்துறைமுகத்தில் இந்திய மீனவர்களது படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால் மீனவர்கள் எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பாகவும் ஆளுநர் ஆராய்ந்தார்.

மயிலிட்டி வைத்தியசாலை வீதி கடந்த காலங்களில் கொங்கிரீட் வீதியாக அமைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அதனை மூடி சுகாதாரத் திணைக்களத்தால் வேலி அடைக்கப்பட்டுள்ளதாக மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பிலும் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

அதேபோல காங்கேசன்துறையிலுள்ள சிறுவர் பூங்காவுக்கான பாதையை பாதுகாப்புத் தரப்பினர் மூடி வைத்துள்ளமையால் எழுந்துள்ள நெருக்கடி தொடர்பாகவும் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார். மேலும், காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் பிரதேச சபையின் பாதையை மூடி தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதையும் ஆளுநர் பார்வையிட்டார்.

அத்தடன் கீரிமலையிலுள்ள செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கான பாதை பற்றைகள் மூடி உள்ளமையையும் அதனால் மக்கள் தனியார் பாதை ஊடாகச் சென்று வருகின்றமையும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் அதனையும் ஆளுநர் நேரடியாகப் பார்வையிட்டிருந்தார்.

இது தொடர்பில் துறைசார் தரப்புக்களுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு ஆளுநர் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |




Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தயாராகும் தமிழ்க் கட்சிகள்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு சந்திப்பில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கூட்டை உருவாக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இக்கூட்டுக்குள் ஏற்கனவே சங்குச் சின்னத்தின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளும் உள்ளிட்ட மொத்தம் ஒன்பது கட்சிகள் ஒன்றிணைந்திருப்பதாகக் கூறப்பட்டது. ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளோடு கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியும் இந்தக் கூட்டுக்குள் அடங்கும் என்று கூறப்பட்டது. மேலும், முன்பு தமிழரசுக் கட்சிக்குள் இருந்த சரவணபவன், தவராசா ஆகி-யோரின் சுயேச்சைக் குழுவும் இந்த கூட்டுக்குள் வருவதாகக் கூறப்பட்டது.

கூட்டுக்கான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற பொழுது அதில் கலந்து கொண்ட விக்னேஸ்வரனின் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டுக்குள் சந்திரகுமாரை இணைப்பது தொடர்பாக கட்சியின் தலைவராகிய விக்னேஸ்வரனோடு கதைத்து முடிவெடுக்க வேண்டும் என்று கூறி கூட்டத்துக்கு வெளியே போய் அலைபேசியில் கதைத்திருக்கிறார்கள்.

மேலும் சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு கட்சியைச் சேர்ந்தவர் வேறு ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கிறார். இக்கூட்டில் இப்பொழுது சந்திரகுமார் இருக்கிறார். எதிர்காலத்தில் சிறீதரன் தமிழரசு கட்சிக்குள் இருந்து வெளியேறி இக்கூட்டுக்குள் வர விரும்பினால் அவர் சந்திரகுமார் இருக்கும் கூட்டுக்குள் இணையத் தயாராக இருப்பாரா? என்று. அப்பொழுது சந்திரகுமார் கூறினாராம், பிரச்சினை இல்லை தமிழரசுக் கட்சிக்குள் இருந்து சிறீதரன் வெளியேறினால் நாங்கள் தமிழரசுக் கட்சியோடு இணைந்து விடுகிறோம் என்று.

இக்கூட்டின் பிரதான நோக்கம், தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதைத் தடுப்பதுதான் என்று சிறீகாந்தா சுட்டிக்காட்டியிருக்கிறார். இதில் எந்தக் கட்சி முன்பு யாரோடு நின்றது என்ற விவாதங்களுக்கு இடமில்லை. தேசிய மக்கள் சக்தியை உள்ளூராட்சி சபைகளில் எப்படித் தோற்கடிப்பது என்றுதான் யோசிக்க வேண்டும் என்ற பொருள்பட அவர் உரை நிகழ்த்தியுள்ளார். முடிவில் கூட்டுத் தொடர்பான விவரங்களை சுரேஷ் பிரம்மச்சந்திரன் ஊடகங்களுக்கு வழங்கினார்.

ஆனால் அடுத்த நாள் அதாவது திங்கட்கிழமை அதை மறுத்து ஐங்கரநேசனின் தமிழ்த்தேசிய பசுமை இயக்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத கட்சிகளோடு இணைந்து செயல்படுவதில் தமக்குள்ள விருப்பமின்மையை வெளிப்படுத்திய அந்த அறிக்கையில், புதிய கூட்டுத் தொடர்பாக தாம் இன்னமும் முடிவெடுக்கவில்லை என்று அந்த கட்சி தெரிவித்துள்ளது. விக்னேஷ்வரனின் கட்சியிடமும் அவ்வாறான குழப்பங்கள் இருப்பதாக தெரிகிறது. கடந்த புதன்கிழமை நடந்த கட்சிகளின் சந்திப்பின்போது மணிவண்ணன் ஊடகங்களுக்குக் கூறியது அதைத்தான் காட்டுகிறது. குறிப்பாக சந்திரகுமாரை கூட்டுக்குள் உள்வாங்குவது தொடர்பாக இந்த இரண்டு கட்சிகளிடமும் தயக்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது.

தொடக்கத்திலேயே பிரச்சினை. அதை விடப் பிரச்சினை, இந்தக் கூட்டு தேசிய மக்கள் சக்திக்கு எதிரானதா? அல்லது சிறீதரனுக்கு எதிரானதா? என்ற கேள்வி. ஏனென்றால் சந்திரக்குமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான பகை அதிகம். அது உள்ளூர்த் தன்மை மிக்கது. முன்பொரு காலம் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்குள் கிளிநொச்சி இருந்த பொழுது, அந்த அமைப்புக்கு ஆதரவாக இருந்தவர்கள் அல்லது அந்த அமைப்பில் முக்கிய பொறுப்புகளை வகித்த, பின்னர் புனர்வாழ்வு பெற்று வந்த, ஒரு தொகுதியினர் சந்திரகுமாரோடு நின்றார்கள். இப்பொழுதும் நிற்கிறார்கள். அதேசமயம் இன்னொரு தொகுதியினர் சிறீதரனுடன் நிற்கிறார்கள். இங்கே பிரச்சனை இதுதான். 2009க்கு முன் ஒரு அமைப்போடு நின்றவர்கள் இப்பொழுது இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். இந்த மாவட்ட மட்டப் பகை ஒப்பீட்டளவில் கூர்மையானதாகக் காணப்படுகிறது. சந்திரகுமார் டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து விலகி சில ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் சிறீதரனுக்கும் அவருக்கும் இடையிலான மோதல் தணிவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் அந்தக் கூட்டுக்குள் சந்திரகுமார் இருக்கும்வரை சிறீதரன் அந்த கூட்டுக்குள் வரப்போவதில்லை. அதுமட்டுமல்ல, சந்திரகுமாருக்கும் சுமந்திரனுக்கும் இடையே ஏற்கனவே உரையாடல் நடந்து கொண்டிருப்பதாக ஒரு தகவல் உண்டு. இந்நிலையில் சிறீரனுக்கு எதிராக, அந்த கூட்டுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான இணக்கம் அதிகரிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் கிளிநொச்சியில் சந்திரகுமாருக்கு ஆதரவானவர்கள் சுதந்திரனுக்கும் ஆதரவாகக் காணப்படுகிறார்கள்.

சந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையில் உள்ள விரோதத்தைப் போன்றதுதான் சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான விரோதமும். இரண்டு பேருமே பொது எதிரியை விடவும் ஒருவர் மற்றவரைத்தான் அதிகம் விரோதமாகப் பார்க்கின்றார்கள். அதனை அவர்களுடைய ஆதரவாளர்கள் முகநூலில் போடும் குறிப்புகளில் காண முடியும்.சிறீதரனை எப்படிக் கட்சியை விட்டு அகற்றுவது என்று சுமந்திரன் சிந்திக்கிறார். கட்சியை விட்டு நீங்காமல் கட்சிக்குள் இருந்தபடியே எப்படி சுமந்திரனை வெற்றி கொள்வது என்று சிறீதரன் சிந்திக்கின்றார். சிறீதரனாக கட்சியை விட்டுப் போகமாட்டார் என்பது இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. அதே சமயம் சுமந்திரன் அணியும் அவரை பலவந்தமாக நீக்காது என்று தெரிகிறது. இந்த நிலைமை தொடரும் வரை கட்சி இரண்டு அணிகளாகப் பிளவுண்டே காணப்படும்.

அதைப் போலவே கஜேந்திரக்குமாருக்கும் மணிவண்ணனுக்கும் இடையிலான விரோதமும் கூர்மையானது. விக்னேஸ்வரனின் கட்சியின் பிரதிநிதியாக இது போன்ற சந்திப்புகளில் மணிவண்ணன் பங்குபற்றுவதுண்டு. இவ்வாறு மணிவண்ணன் அந்த கூட்டுக்குள் காணப்பட்டால் கஜேந்திரக்குமார் அந்த கூட்டை எதிர் நிலையில் வைத்தே பார்ப்பார்.

இவ்வாறு கட்சிகளுக்குள் காணப்படும் பிளவுகள், ஒரு மாவட்டத்தில் காணப்படும் பிளவுகள், போன்ற பல அம்சங்களினது பிரதிபலிப்பாக ஒரு புதிய கூட்டு உருவாகியிருக்கிறது. இக்கூட்டானது தமிழ்த் தேசிய வாக்குகளை ஒன்றிணைக்குமா?

ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் ஒன்றிணைவு முயற்சியை முன்னெடுத்தது. ஆனால் அது தேர்தலுக்கானது அல்ல என்று அந்தக் கட்சி கூறிக்கொள்கிறது. அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்க முயற்சித்தால் அதை நோக்கித் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டும் என்பதே முன்னணியின் நோக்கம்.அந்த அடிப்படையில் முன்னணியானது ஏற்கனவே சிறீதரனோடு சந்திப்புகளை நடத்தியிருக்கிறது. செல்வம் அடைக்கல நாதனோடும் சந்திப்புகளை நடத்தியிருக்கிறது.

இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியிடம் உத்தியோகபூர்வமான ஒரு முடிவை கேட்டு கஜேந்திரகுமார் உத்தியோகபூர்வமாக ஒரு கடிதத்தை எழுதியிருந்தார். அதற்குப் பதில் கடந்த வாரம் தமிழரசுக் கட்சியால் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பதிலின்படி தமிழரசுக் கட்சி மேற்படி ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு ஆதரவாக இல்லை என்று தெரிகிறது. ஆனால் சிறீதரன் தொடர்ந்தும் அந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளில் ஒத்துழைப்பார் என்று கருதத்தக்கதாக அவருடைய கருத்துக்கள் காணப்படுகின்றன. அப்படியென்றால் அவர் கட்சியின் மத்திய குழுவை மீறித் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு ஒத்துழைக்க போகின்றாரா?

இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் தொடர்பாக கஜேந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதனோடும் ஏற்கனவே உரையாடியிருக்கிறார். செல்வம் அங்கம் வகிக்கும் சங்குக் கூட்டணியானது அது தொடர்பாக உத்தியோபூர்வமான கருத்து எதையும் தெரிவித்திராத ஒரு பின்னணியில், கடந்த வாரம் ஒரு புதிய கூட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் இப்பொழுது இரண்டு ஒருங்கிணைப்பு முயற்சிகள் தமிழ்த் தேசியப் பரப்பில் உண்டு. முதலாவது ஒருங்கிணைப்பு முயற்சி, ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைவது. இரண்டாவது ஒருங்கிணைப்பு முயற்சி விரைவில் வரக்கூடிய தேர்தல்களை நோக்கி ஐக்கியப்படுவது. முதலாவது முயற்சி தேர்தல் நோக்கத்துக்கானது அல்ல என்று கூறப்படுகிறது.

ஆனால் இந்த இரண்டு முயற்சிகளும் ஒன்று மற்றதற்கு ஆதரவாக இல்லை என்று கருதத்தக்க விதத்தில்தான் நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை உருவாகிய கூட்டு தேசிய மக்கள் சக்திக்கு எதிரானது மட்டுமல்ல கஜேந்திரகுமாருக்கும் சிறீதரனுக்கும் இடையிலான உறவிற்கும் எதிரானதா என்ற கேள்விக்கு விடை மிக முக்கியம்.

எனவே இரண்டு கூட்டுக்களையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், தமிழ்த் தேசிய வாக்குகளை அவர்கள் ஒன்று திரட்டுவார்களா அல்லது சிதறடிக்கப் போகிறார்களா என்ற கேள்வி எழுகிறது.

இதேசமயம் கிடைக்கும் தகவல்களின்படி, தென்மராட்சியில் உள்ளூராட்சித் தேர்தலில் அருந்தவபாலன் சுயேச்சையாக ஒரு அணியை இறக்கப் போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் அனந்தி சசிதரனும் அவ்வாறு ஒரு திட்டத்தோடு இருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் அவர் இப்பொழுது ஜெனிவா கூட்டத் தொடருக்காக ஸ்விட்சர்லாந்துக்கு வந்து விட்டார். மேற்படி அணிக்குள் மன்னாரைச் சேர்ந்த சிவகரனும் காணப்படுகிறார். இவர்கள் மூவரும் ஏற்கனவே இது தொடர்பாகச் சந்தித்துப் பேசியிருப்பதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன. மேலும் சுமந்திரன் இவர்களை விரைவில் சந்திக்கப் போவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

அருந்தவபாலன் கூட்டமைப்புக்குள் இருந்தபொழுது சுமந்திரனால் அவமதிக்கப்பட்டு அதிலிருந்து வெளியேறியவர். அவருக்கென்று தென் மாராட்சியில் வாக்கு வங்கி ஒன்று உண்டு. ஆனால் அவர் பெருமளவுக்குத் துடிப்பாகச் செயல்படாத ஒரு பின்னணியில், அவருடைய வாக்கு வங்கி தொடர்ந்து பலமாக உள்ளதா இல்லையா என்ற சந்தேகங்கள் உண்டு. அப்படித்தான் சிவகரனின் விடயத்திலும். அனந்திக்கு அப்படிப்பட்ட வாக்கு வங்கியே கிடையாது. அவருடைய கட்சிக்குள்ளும் அவரை விட வேறு யாரையும் பார்க்க முடியவில்லை. அது ஒரு தனிநபர் கட்சி. இந்த மூன்று பேர்களையும் சுமந்திரன் சந்திப்பதன் நோக்கம் அவர்களை மீண்டும் தமிழரசுக் கட்சிக்குள் உள்வாங்குவதை இலக்காகக் கொண்டது என்று ஒரு கதை உண்டு.

இப்படிப் பார்த்தால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக தமிழ்க் கட்சிகள் புதிய ஒருங்கிணைப்புக்களை நோக்கிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டன. இந்த விடயத்தில் சற்று முன்கூட்டியே தமிழ்க் கட்சிகள் சிந்தித்திருப்பது சாதகமானது. ஆனால் மேற்படி ஒருங்கிணைப்பு முயற்சிகளும் சந்திப்புகளும் எதைக் காட்டுகின்றனவென்றால், தமிழ்த் தேசிய வாக்குகளை ஒன்றிணைப்பதற்கு கட்சிகள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும் என்பதைத்தான்.

# யாழ். இசை கலையகம் நடத்தும் மாபெரும் சிலோன் சிங்கர் தேர்வில் வெற்றி பெறுவோருக்கு இந்தியாவில் பாடும் வாய்ப்பு!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்





யாழ். இசை கலையகம் நடாத்தும் "மாபெரும் சிலோன் சிங்கர் தேர்வு" போட்டியில் வெற்றி பெறும் வெற்றியாளர்களை இந்திய அனுப்பி போட்டிகளில் பங்கேற்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கவுள்ளதாக பிரபல தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கலைத்தூது மண்டபத்தில் 26ம் திகதி அன்றையதினம் புதன்கிழமை நடைபெற்ற குறித்த நிகழ்வில் 60க்கும் மேற்பட்ட பாடகர்கள் கலந்து கொண்டு தமது தமது திறமைகளை வெளிப்படுத்தினர். அதில் முதல் சுற்றில் தெரிவான பாடகர்களுக்கு இரண்டாம் சுற்று நடைபெற்று, இறுதி சுற்று நான்காம் மாதம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் கலந்து கொண்டு உரையாற்றும் போது, எமது பிரதேச பிள்ளைகளின் திறமைகளை வெளியுலகத்திற்கு கொண்டு வருவதற்கு இவ்வாறான நிகழ்வுகள் அவசியமாகும். அந்த வகையில் இந்த நிகழ்வினை நடாத்துபவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இதில் பலர் மிக நன்றாக பாடியுள்ளனர். சிலரின் பாடல்களை கேட்கும் போது என்னையறியாமலே கண்ணீர் வந்தது. அந்தளவிற்கு அந்த பாடல்கள் எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தின. இங்கு பாடிய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களும், பாராட்டுக்களும். உரித்தாகுக!

பிள்ளைகள் இந்த மேடையுடன் மாத்திரம் நின்று விடாது தமது திறமைகளை மேம்படுத்தி பல மேடைகள் காண வேண்டும் என வாழ்த்துகிறேன். இந்த போட்டியில் வெற்றி பெறும் மூவருக்கு இந்திய சென்று போட்டிகளில் பங்கேற்க ஏற்பாடுகளை செய்து கொடுக்க முயற்சிப்பேன் என மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் பொறியியலாளர் ஒருவரின் தன்னிச்சையான செயற்பாட்டால் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இளைஞன்!

மீனவர்களின் கருத்துக்களை உள்வாங்காது கெங்காதேவி துறைமுகத்தை, அதிகாரிகள் தன்னிச்சையாக அபிவிருத்தி செய்து வருவதால் அந்த கடற்பகுதியில் மீனவரின் படகு ஒன்று விபத்துக்குள்ளாகி அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இச்சம்பவம் குறித்து மீனவர்கள் செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கையில், கடற்றொழில் அமைச்சின் மூலம் எமது கடற்றொழில் சங்கத்துக்கு 8 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. எட்டு இலட்சம் ரூபா வேலைத்திட்டத்திற்கான வரைபை நாங்கள் அதிகாரிகளிடம் சமர்ப்பித்தோம். இருப்பினும் அவர்கள் எமது திட்டத்தை புறந்தள்ளிவிட்டு தமது எண்ணத்திற்கு ஏற்றாற்போல் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டனர்.

இதனால் ஆபத்து என்றும் நாங்கள் கூறினோம். ஆனால், கரையோர பாதுகாப்பு திணைக்கள பொறியியலாளரான கெங்காதரன் தர்சன் என்பவர் எமது திட்டவரைபை புறந்தள்ளிவிட்டு பழிவாங்கும் நோக்குடன் தனது விருப்பப்படி அபிவிருத்தியில் ஈடுபட்டார். நாங்கள் கேள்வி கேட்டதன் காரணத்தால் அபிவிருத்தி பணிகளை 5 மீற்றர்கள் தூரம் குறைத்து செய்யுமாறும் வேலையை செய்பவர்களுக்கு கூறினார்.

இந்நிலையில் 26ம் திகதி அன்று புதன்கிழமை காலை இருவர் படகு ஒன்றில் தொழிலுக்கு சென்றுவிட்டு திரும்பினர். இதன்போது அந்த அபிவிருத்தி செய்த இடத்தில் படகு மோதியதில் படகில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டனர். அதில் 20 வயது இளைஞன் படுகாயமடைந்த நிலையில் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு பிறகும் உரிய அதிகாரிகள் எமது கருத்து கேட்காவிட்டால் விளைவுகள் பாரதூரமாக இருக்கும். எனவே உரிய அதிகாரிகள் விரைவில் இதனை கருத்தில் எடுத்து எமக்கு உகந்த வேலைத்திட்டத்தை, எமது வரைபடத்தின்படி செய்துதர வேண்டும் என்றனர்.






NO. #1 ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST



World Famous Indian Astrologer
PANDIT: SAI RAM

Face Reading, Palm Reading,
Horoscope & Date of Birth



SOLUTIONS & SUGGESTIONS:

OPEN 7 DAYS

9 AM to 7.30 PM

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob
Vasthu Prob
Real Estate
and all other

Call for 1 FREE QUESTION

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

100% GUARANTEE

+1 437-829-1722

2993 Islington Ave, North York, ON, M9L 2K9
(Major intersection: STEELES & ISLINGTON)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "முன்னைய அரசாங்கங்கள் செய்ததைப் போலவே நீங்களும் செய்வீர்களாயின் தவறிழைக்கிறீர்கள் என்பதே அர்த்தமாகும்"

## பெப்ரவரி 27ம் திகதி வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் இலங்கை நாடாளுமன்றில் ஆற்றிய உரையின்போது தெரிவிப்பு

27.02.2025ம் திகதியன்று வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் "மாற்றத்தின் போது தலையீடு குறித்து விவாதிக்கப்படும் விடயங்களில் ஜனாதிபதி நம்பகத்தன்மையுடன் இருக்க வேண்டுமானால் அவர் இதனை உறுதிப்படுத்த வேண்டும். இந்த அரசாங்கம் உண்மையில் அந்த அமைப்பு மாற்றத்தை கொண்டு வரப் போகிறது என்று வடக்கு கிழக்கு மக்கள் உண்மையாக நம்பவேண்டும். அப்படியில்லையாயின் நீங்கள் அமைப்பு மாற்றம் என்று சொல்ல முடியாது. முந்தைய அரசாங்கங்கள் செய்ததைப் போலவே நீங்களும் செய்வீர்களாயின் தவறிழைக்கிறீர்கள் என்பதே அர்த்தமாகும்." என்று அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "கௌரவ குழுக்களின் தலைவர் அவர்களே!

தலைப்பு எண் 13 இன் கீழான இந்த விவாதத்தின் கீழ் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக வருவதால் மனித உரிமைகள் ஆணைக்குழு பற்றி நான் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். கடந்த பாராளுமன்றத்திலும் இதே தலைப்பின் விவாதத்தில் நான் பங்கேற்றதை கௌரவ தலைமை உறுப்பினராகிய நீங்களும் அறிந்திருப்பீர்கள். ஆணைக்குழுவின் செயற்பாடு மற்றும் அதன் நம்பகத்தன்மை குறித்து நான் சில சிக்கல்களை எழுப்பினேன்.

ஏனெனில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் சில உறுப்பினர்களுடன் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். மற்றும் பல ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்களை நேரில் சென்று சந்தித்தார். அதன் பின்னர் அவரும் ஏனைய உறுப்பினர்களும் கொழும்புக்கு வந்தபோது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் பேசிய பின்னர், பாதிக்கப்பட்ட சமூகங்கள் இழப்பீடு வழங்க ஒப்புக்கொண்டதாக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். நான் அதைக் கண்டித்து, அது பொய் என்று மிகத் தெளிவாக பதிவு செய்துள்ளேன். கடந்த ஆண்டும் கூட முந்தைய வரவு செலவுத்திட்ட பாதீட்டின் போதும் இந்த கருத்தையே தெரிவித்தேன் என்பதற்காகவே இப்போதும் இதனைப் பதிவு செய்கிறேன்.

பொலிசார் தொடர்பில் எமக்கு சந்தேகம் உள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழு. மற்றும் போலீஸ் எப்படி வேலை செய்கிறார்கள் என்பது குறித்து நம்பிக்கை வரவேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கு பெரிதும் இராணுவமயமாக்கப்பட்டுள்ளது. அடக்குமுறையாக செயல்படுகிறது. அப்பிரதேச மக்களுக்கும், உண்மைக்கும் விரோதமாக செயற்படுகின்றது. சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கனிஸ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானவர்கள் தண்டனை இடமாற்றங்களில் வடக்கு கிழக்கில் உள்ளனர். எனவே மக்கள் மீதான இவர்களின் அணுகுமுறை மிகவும் மோசமாக காணப்படுகிறது. அவர்கள் தமிழ் மொழி பேச மாட்டார்கள். அவர்களினால் மக்கள் பாதிக்கப்படும் போது., பொலிசாரின் தவறான நடத்தைகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும் என்று முழுமையாக நம்பினோம். அவர்கள் தலையீடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதுதான் உள்நாட்டு சூழலில் எமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கையாகும். எனவேதான் முன்னைய அரசாங்கத்தின் காலத்திலும் மனித உரிமைகள் ஆணைக்குழு தவறாக நடந்துகொண்ட போதும் நாங்கள் பிரச்சினைகளை எழுப்பினோம்.

கடந்த அரசாங்கத்தின் போது தையிட்டி என்ற இடத்தில் எமது கட்சியினரும் சிலரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அந்த போராட்டத்திற்கு எதிராக போலீசார் தடை விதிக்க முயன்றனர். அவர்கள் போராட்டத்துக்கு தடைவிதிக்கக் கோரி நீதிமன்றத்திற்கு சென்றனர். ஆயினும், நீதவான் தடை விதிக்க மறுத்துவிட்டார். ஆனாலும், போராட்டத்தை மேற்கொள்வது தொடர்பில் சில நிபந்தனைகளை விதித்தார். அந்த நிபந்தனைகளை நாங்கள் மிகவும் கவனமாக கடைப்பிடித்திருந்தோம். ஆனால் அதனையும் மீறி பலாலி ஓ.ஐ.சி யின் வழிகாட்டலின் கீழ் பலாலி பொலிஸார் எமது கட்சி உறுப்பினர்களையும் ஊடகவியலாளரையும் சட்டத்தரணியையும் கைது செய்திருந்தார். நீதிமன்றம் போராட்டத்துக்குத் தடை விதிக்கவில்லை என்று கூற அந்த இடத்துக்கு வந்திருந்த சட்டத்தரணியையும் கூட போலீசார் கைது செய்திருந்தனர்.

இந்த சம்பவம் குறித்து எட்டு முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டன. அவை HR/JA /165 முதல் 172/2023 வரையிலான முறைப்பாட்டிலக்கங்களாகும். இந்த முறைப்பாடு சம்பவம் நடைபெற்ற குறித்த காலத்தில் செய்யப்பட்டுள்ளன.

பொலிசாரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தபோது, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய பிரதிநிதி பலாலி பொலிஸ் நிலையத்திற்கு சென்றிருந்தார். பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்துத் தானே நேரில் சென்று தகவல்களைத் தெரிந்துகொள்ள அவர் விரும்பியபோதும் பொலிசார் மறுத்திருந்ததோடு இடையூறுகளை மேற்கொண்டிருந்தனர். அவர்களையும் அச்சுறுத்தியிருந்தனர்.

அதன்பின்னர், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பிணையில் வெளிவந்தனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு சென்று முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். இன்றுவரை எந்தவொரு விசாரணையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படவில்லை. என்ன நடக்கிறது என நாம் தேடிய போது, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டால், அவர் எங்களுக்கு சார்பாகவே செயற்படுவார் என்று பலாலி ஓ.ஐ.சியால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டதாக அறிந்தோம். இதனால், பாதிக்கப்பட்டவர்களுடைய முறைப்பாட்டு கோப்பு கொழும்புக்கு அனுப்பப்பட்டதாகவும் அறிந்தோம். கோப்பு கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தபோதும் இன்று வரை விசாரணை நடைபெறவில்லை.

காவல்துறை அல்லது ஏதேனும் ஒரு அரசு நிறுவனத்தின் நியாயத்தன்மை மற்றும் உண்மைத்தன்மை குறித்து நாங்கள் கேள்வி எழுப்பினால், அவர்களால் எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக நாங்கள் கருதும் போது, எங்களிடம் இருக்கும் ஒரே வழிமுறையாக மனித உரிமைகள் ஆணைக்குழுவையே நம்புகிறோம். ஆணைக்குழு நம்பிக்கையைக் கட்டியெழும்பும் விதமாக சுதந்திரமான முறையில் செயற்படவேண்டும். அது யாராக இருந்தாலும் சரி அவற்றுள் தலையிட வேண்டும். உங்களிடம் நீதிப்பொறிமுறை இருக்க வேண்டும், அந்த நீதிவிசாரணை உங்களிடம் இல்லையென்றால் அது ஒரு பிரச்சனையாகிவிடும். இதுவே கடந்த அரசாங்கத்தின் கீழும் இருந்தது.



அவர்களுக்கு சுதந்திரம் உள்ளது என்பதை இந்த அரசாங்கம் ஆணைக்குழுவிடம் வலியுறுத்த வேண்டும் என்பதைநான் வலியுறுத்துகிறேன். விசாரணைகளை பெறுமதியாக ஆக்குவதற்கும், அவர்களுக்கு சுதந்திரம் மற்றும் சட்டபூர்வமான தன்மை உள்ளது. அவ்வாறு நடக்கபோவதில்லையென்றால், அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் நாம் கேள்விக்கு உட்படுத்த வேண்டும்.

கௌரவ வெளியுறவு அமைச்சர் இப்போது ஜெனிவா சென்று அறிக்கை வெளியிட்டார். நிலைமாறுகால நீதியைப் பற்றி தெரிவித்தார். காணாமல் போனவர்களின் அலுவலகத்தை பலப்படுத்தப் போவதாகவும், இழப்பீடு அலுவலகத்தை வலுப்படுத்துவதாகவும், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தை வலுப்படுத்துவதாகவும், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை சட்டரீதியாக உருவாக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

போர்க்காலத்தில் நடைபெற்ற விடயங்களுக்கான தீர்வு குறித்து ஒரு வார்த்தைகூட இல்லை, குற்றவியல் நீதி பற்றி ஒரு வார்த்தை இல்லை. நிலைமாறுகால நீதிக்கு குற்றவியல் நீதித்துறையில் குற்றவியல் விசாரணைகள் மற்றும் வழக்குகள் மிக முக்கியமான பகுதியாக இருக்க வேண்டும். அது இல்லாவிட்டால் கௌரவ வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் பேசியதெல்லாம் மூடிமறைக்கும் செயற்பாடாக மட்டுமே அமையும். நீங்கள் மறைப்பதற்கே முயற்சிக்கிறீர்கள். இனப்படுகொலை செய்தவர்கள் மீது வழக்குத் தொடராமல், அதை மறைக்கப் பார்க்கிறீர்கள்.

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் தேதி தற்போதைய ஜனாதிபதி அவர்கள் போர்க்கால அட்டூழியங்களுக்கு எதிராக ஒரு வழக்கு கூட தொடர முடியாது என்று பகிரங்கமாக தெரிவித்திருந்தார். அதை அவர் பலமுறை பொதுவெளிகளிலும் சொல்லியிருக்கிறார். இதனாலேயே நான் இதை மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன்.

அப்படியானால் வெளிவிவகார அமைச்சர் கூறும் இந்தக் கருத்துக்கள் என்ன?

அவர் உண்மையில் சொல்வது என்னவென்றால், பொறுப்புக்கூறல் இருக்கப்போவதில்லை என்பதையே கூறுகிறார். அது மறைக்கப்படும் என்றே கூறுகிறார். ஆனால் சில ஆணைக்குழுக்கள் மட்டும் இருக்கும் என்றே கூறுகிறார்.

அவர்கள் அழும்படி கேட்கப்படுவார்கள். மக்கள் அழுவார்கள். பின்னர் அவர்கள் கட்டியணைத்து முத்தமிடவேண்டும் என்பதுதான் உங்கள் நிலைப்பாடு என்றால், இது கவலைக்குரியது.

ஏனெனில் இது முந்தைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியத அதே விடயம்தான்.

இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற்போனோர் அலுவலகம் என்பவை மூடிமறைப்பதற்காகவும், வழக்குத் தொடரப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதாகவுமே அமைக்கப்பட்டதாக அவர் அதை பற்றி பெருமையாக கூறியிருந்தார்.

அவ்வாறு தான் நீங்களும் செய்யப்போகிறீர்களாயின், நீங்கள் ஆட்சிக்கு வரும்போது, அமைப்பு மாற்றம் என்று சொல்லி இருக்க முடியாது. நீங்கள் அதே நோக்கங்களையே கொண்டிருக்கிறீர்களானால் அது என்ன அமைப்பு மாற்றம்?

எனவே தலையீடு குறித்து விவாதிக்கப்படும் விடயங்களில் ஜனாதிபதி நம்பகத்தன்மையுடன் இருக்க வேண்டுமானால் அவர் இதனை உறுதிப்படுத்த வேண்டும். இந்த அரசாங்கம் உண்மையில் அந்த அமைப்பு மாற்றத்தை கொண்டு வரப் போகிறது என்று வடக்கு கிழக்கு மக்கள் உண்மையாக நம்பவேண்டும். அப்படியில்லையாயின் நீங்கள் அமைப்பு மாற்றம் என்று சொல்ல முடியாது. முந்தைய அரசாங்கங்கள் செய்ததைப் போலவே நீங்களும் செய்வீர்களாயின் தவறிழைக்கிறீர்கள் என்பதே அர்த்தமாகும்". என்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

# கனடா ஸ்காபுறோ ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற "சிவராத்திரி" யை ஒட்டிய விசேட வழிபாடுகள் மற்றும் அபிசேகங்கள்











கடந்த 25-02-2025 செவ்வாய்க்கிழமையன்று கனடாவில் பல ஆலயங்களில் நடைபெற்ற "சிவராத்திரி" தொடர்பான விசேட வழிபாடுகள், பூஜைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்றதை நாம் பல ஊடகங்கள் வாயிலாக கண்டு களித்தோம்.

இந்த வரிசையில் கனடா ஸ்காபுறோ ஶ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற "சிவராத்திரி" யை ஒட்டிய விசேட வழிபாடுகள் மற்றும் அபிசேகங்கள் ஆகியவை பக்தர்களை ஈர்த்தன.

பக்தர்களுக்கு தெய்வீகம் சார்ந்த உள உற்சாகத்தை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இசை நிகழ்ச்சிகள் மற்றும் நடனங்கள் ஆகியவையும் சிறப்பாக இடம்பெற்றன.

அங்கு இடம் பெற்ற இசை நடன நிகழ்ச்சிகளை வழங்கிய மாணவிகள் மற்றும் இசை. நடன ஆசிரியைகளும் ஆலயத்தின் பிரதம குருக்கள் மற்றும் அவரது பாரியார் ஆகியோரால் கௌரவிக்கப்பெற்றனர்.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் அனைத்து சாமப் பூசைகளிலும் கலந்து கொண்டு சிவராத்திரி தினத்தை பக்தியுடன் அனு'டித்தனர்.

# 'Durham Elementary Honour Band & Choir', presented by Durham District School Board







'Durham Elementary Honour Band & Choir', presented by Durham District School Board, and performers are Grades 7 & 8 students from 44 different Elementary Schools in the District.

This colorful event took place on Saturday, 23rd, 2025, at Eastdale Collegiate and Vocational Institute High school in Oshawa,

More than 250 student performers were in the whole band and the instruments they played were Flute, Bass Clarinet, Alto Saxophone Tenor Saxophone, Baritone Saxophone, Bassoon, Clarinet, Trumpet ,Trombone ,French Horn , Tuba, Bass Guitar and Percussion.

Number of School Principals and Teachers had spent more than 2 months for practicing, in order to make this musical event, a successful one.

More than one eight hundred invited parents and friends graced the event and enjoyed students' performance.

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...
வசந்தம் உளவளத்துணை நிலையம்
VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE
சமூக உளவளம் பேணும் தொடர் - 91
Psychosocial Educational Series - 91
சர்வதேச மகளிர் தின நிகழ்வு
International Women's Day Event
03 March 2025 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)
Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

மகளிர் நலம் - மகப்பேறின்மை
Women's Health - Infertility
Dr. Paul Joseph
(Bachelor of Homeopathic Medicine and Surgery)
Former Prof. Tamil Nadu Dr. M.G.R. Medical University
– Homeopathic Medical Colleges
Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!

Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

NISSAN | VILLAGE NISSAN

# தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
*S CVT* ULTRA-LOW

**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,695 Down

+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
*S* ULTRA-LOW

**$69** WEEKLY | **39** MOS. LEASE $2,192 Down

+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
*S AWD*

**0.99%** | **30** MOS. LEASE

+$1,000 60th Anniversary Cash



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com






Carefirst Family Health Team

# Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24






# விதைப்புக்கான சனிக்கிழமை & தோட்டம் அமைக்கும் காட்சி

சனிக்கிழமை, மார்ச் 8 | 10 காலை 10 முதல் மாலை 3 வரை
சென்சுரி கார்டன்ஸ் ரிக்ரியேஷன் மைய கலையரங்கம்
340, வோட்டன் சாலை கிழக்கு, பிராம்ப்டன்

## அனைத்து வயனருக்கும் இலவச நிகழ்ச்சிகள்

- தோட்டம் அமைப்பது பற்றிய தகவல்கள்
- காட்சிப்பொருட்கள், பட விளக்கவுரைகள் மற்றும் பேச்சாளர்கள்
- விதைகளை பகிருங்கள், கைமாற்றுங்கள் & விலைக்கு வாங்குங்கள்
- தோட்டம் அமைக்கும் சமுதாயத்தை உருவாக்குங்கள்
- குழந்தைகளுக்கான திடல்
- விதைக் கடை

**முதல் 100 வருகையாளர்களுக்கு 100 இலவச செடிகள்!**



Brampton Horticultural Society
brampton.ca/parks
BRAMPTON


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
COMMERCIAL
CONSTRUCTION
" Effortless home buying, customized just for you."
OUR SERVICE
• Purchase
- Builder Purchase
- MLS Purchase
- Private Purchase
• Equity line of Credit
• Refinance
• Renewal
NESAN
Subramaniam
CALL US
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
TD Canada Trust
NATIONAL BANK
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
Manulife
Desjardins
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. ஏப்பிரல் 27, 2025ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ....................................

குடும்பப் பெயர்: ....................................

பிரிவு: ....................................

பிறந்த திகதி: ....................................

தொலைபேசி எண், email: ....................................

....................................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**



# தமிழ்க் கவிதை உலகிற்கு கவிநாயகர் கந்தவனம் அவர்களின் பங்களிப்பு – ஒரு மெய்யியல் நோக்கு

# DR. KAVINGNAR KANTHAVANAM'S CONTRIBUTION TO TAMIL POEMS: A PHILOSOPHICAL VIEW



As a student of philosophy, I think it is better to explain my understanding of poems in a few words, before writing something about Kavingnar V. Kanthavanam from my memory in the middle school experience.

*A momentless intensity pure and bare,*
*I stretch to an external everywhere.*
*I have become what before time I was;*
*A secret touch has quieted thought and sense.*
*All things by the agent mind created pass*
*Into a void and mute magnificence.*
*~ Sri Aurobindo*

Human life is caught in the ceaseless movement of time, of perpetual coming – to – be and passing – away. The changing forms of human life and of the native have captured man's reflective attention in the East and West throughout the ages by shaping the main thrust of his philosophical quest and by posing the basic questions of his religious life. Consider for a moment the perpetual change of role, seen and actor in nature's theater: Summer's growth becomes fall's harvest; night following the day, clouds of white alter into ominous thunder heads. Children grow into aged men. Is it surprising that the earliest thinkers were amazed at the transience of all forms and contents of the world, including themselves? Yet such coming to be and ceasing to be essentially defined time. In this maelstrom of change has sought to understand the meaning, of the life given to him and its relationship to the nature of all beings. What I am emphasizing here is that the poet's and the philosopher's questions are the same. Ultimately what is the purpose of human life? Subramanya Bharathi also asked the same question in the following poem:

"தேடிச்சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி மனம்
வாடித்துன்ப மிகவுழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவமெய்தி - கொடுங்
கூற்றுக்கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?

**Devotional Songs - 4**
**Bhaarathiyaar Poems**

Good poets whatever their time, nationality and Language are exceptional beings and carriers of divine truth. The only significant difference from poet to poet is perhaps the difference in the chronology of their lives. In the external forms of poetry, such as technique and style, certain differences may exist among them; but all true poets belong to the one unit and whole of poetic genius. Each poet in his own manner brings to this world a new message, a new form of reality. This message is the truth of Creation. A poet tries to express this ultimate reality to inspire human beings. This reality is expressed in a language that is suited for a period and for a social way of thinking. It is because reality is affected by units of time, tradition and society that a poet attempts to express this reality in terms of those units.

As poetry is capable of distilling the sensuous enjoyment of all the senses and as it is born in the very deep experience of those senses ultimately perceiving the aspect of ultimate reality, it carries with the intoxication of liquor, the sweetness of a limitless firmament. Poetry is born over a very deep experience of the senses, the intellect, the mind as well as the spirit. Without separating the joy of life and running away from its sorrows cannot be a true poet; on the contrary poetry is the expression of the frenzy arising from the intoxication of life. Poetry is born of the experience of the harmonies of the world and great passion emanates from experiencing the tiniest joys of the universe. Not only joy, but sorrow too is a note in the harmony of the world. The above aspects we can clearly see in the following works of Kavingnar V. Kanthavanam:

ஏன் இந்தப் பெருமூச்சு, கீரிமலையினிலே,
கவியரங்கில் கந்தவனம், விநாயகப்பா.

The life vision of completeness of life is the primary experience of Indian poetry. Kavingnar V. Kanthavanam belongs to this group of Indian poets who perceive life as whole and complete.

Turning to my experience with Kavingnar V. Kanthavanam, I had the opportunity of studying under him when I was a middle school student at Vasaavilaan M.M.V. Sri Lanka in 1965. During my middle school time we were very scared of Kanthavanam, because he was a very strict disciplinarian, but a nice and good-hearted man. He was always concerned about the students' future. He never intended to take revenge against any student. His character reminds us of Avvaiyaar's Muuthurai poem:

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும் போலவாரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

ஔவையார் மூதுரை *(23)*

***By hasty wrath disjoined the meaner Kind***
***Like broken stone are never more combined***
***Remingle soon the better soul their hearts.***
***Like fractured gold by fusion blend again***
***No longer sundered do the best remain***
***Than water that pointed arrow parts***

**Avvaiyaar Muuthurai (23)**

What I am trying to say is that Kavingnar Kandavanm's anger always was helpful to the student to remove ignorance and illusions, not destroy or hurt their feelings or their future.

I am very proud and have a great pleasure to bear witness living extra ordinary qualifications that my esteemed teacher, poet, and dear friend we missed/lost last year. His understanding as a poet of Tamil was well recognized in Sri Lanka, Europe, and Canada. His publications have over one hundred books and numerous articles in various subjects and many students (including me) he has produced will amply testify to that. And I also want to add that Dr. Kavingnar Vinayagar Kanthavanam is a distinguished philosopher in his own right and a thinker possessed of a powerful mind. He has a great understanding of the Philosophy of Tamil Saivism, Saiva Siddhanta philosophical issues from a classical Tamil perspective which I have rarely seen matched. He is one of the rare kind of people who are proficient in Tamil and English in our community in Canada. Dr. Kavingnar Vinayagar Kanthavanam has a fine presence and unusual capacity for establishing social relationships with people pf different ethnic and cultural backgrounds. And, most of all he is a wise and intelligent man with a benevolent disposition which endears him to all who come across him.

In conclusion, as Bagavad-Gita says, Dr. Vinayagar Kanthavanam's soul will never die, because of his devoted teaching and selfless actions to Sri Lankan Tamil people in Canada. He was the embodiment of the spirit of Bhagavat Gita, where Lord Krishna exhorts all mankind with the words, "Do your duty, renounce the fruits of duty. Be Intent on actions, not on the fruits of action, avoid attraction to the fruits and attachment to inaction."

As a man discard worn-out clothes to put on new and different ones, so the embodied self/soul discards it's worn-out bodies to take on new ones. Therefore, Dr. Kavingnar Vinayagar Kanthavanam has completed his mission, and we should celebrate his completed life and in return we should continue his mission then only his soul will be happy.

**K. Ananthanathan, MA, MSW, RSW**
**Registered Social Worker &**
**Psychotherapist with College of Social Workers & Social Services Workers (OCSWSSW) Helping Disabilities**



# உக்ரைனிய போரில் அமெரிக்காவின் இரட்டை வேடம்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா



**(ரஷ்ய படையெடுப்பிற்கு சில வாரங்களுக்குப் பிறகு 2022இல் ஒரு சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடத் தயாராக உக்ரைன் இருந்தது. ஆனால் அமெரிக்காவின் அன்றைய ஆட்சியாளர்கள் அந்த ஒப்பந்தத்தைத் தடுத்தனர் என்பதும் பலருக்கும் தெரியாத உண்மையாகும்.**

**வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும் தற்போது உக்ரைனிலும் அமெரிக்கர்கள் தங்கள் வேலை முடிந்ததும் அவர்களை குப்பையில் எறிந்துவிட்டு அடுத்த இடத்திற்குச் சென்று விடுவார்கள். அமெரிக்கர்களுக்கு தேவை தங்கமும் தகரமும் தான். இதுவே துயரமிகு வரலாறாக தொடர்கிறது)**

உக்ரேனில் 2014 இல் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விக்டர் யானுகோவிச்சின் அரசாங்கத்தை கவிழ்த்த அரசியல் எழுச்சியின் பெரும்பகுதிக்கு அமெரிக்காவே காரணம். அதற்கு அப்போது கூறப்பட்ட காரணம் விக்டர் யானுகோவிச்சின் அரசு ரஷ்ய சார்பு நிலையை கொண்டது என்ற குற்றச்சாட்டே.

அத்துடன் டான்பாஸில் ரஷ்ய மொழி பேசும் சிறுபான்மையினர் மற்றும் வணிகங்களைத் தாக்கும் பாசிச உக்ரைனிய தேசிய சார்பு தீவிரவாதிகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களை அள்ளி வழங்கியது.

டான்பாஸில் மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஜெலென்ஸ்கியின் முயற்சிகளை அமெரிக்கா தடுத்தது என்ற குற்றச்சாட்டை முன்வைத்தது முன்னைய உக்ரைனிய அரசியல் இருந்த அமைச்சர்கள் ஆவார்கள்.

உக்ரைன் தனது சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பது பற்றி ஊக்கமளிக்கும் வகையில் பேச ஜெலென்ஸ்கியை அமெரிக்கா ஊக்குவித்ததுடன், பல்வேறு உக்ரேனிய இராணுவப் பிரிவுகளை நேட்டோ பயிற்சிகளில் ஈர்த்தது.

போருக்கு முன்பாகவே ரஷ்யாவுடன் செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களிலிருந்தும் உக்ரைன் விலக வேண்டும் என்று அமெரிக்கா கடுமையாக வலியுறுத்தியது.

2022 இல், ரஷ்ய படையெடுப்பிற்கு சில வாரங்களுக்குப் பிறகு ஒரு சமாதான ஒப்பந்தம் கையெழுத்திடத் தயாராக இருந்தது. ஆனால் அமெரிக்காவின் அன்றைய ஆட்சியாளர்கள் அந்த ஒப்பந்தத்தைத் தடுத்தனர் என்பதும் பலருக்கும் தெரியாத உண்மையாகும்.

ரஷ்யாவுடன் போரிட உக்ரேனிய இராணுவ அதிகாரிகளின் ஆலோசனை இருந்தபோதிலும், அமெரிக்கக் கருத்தைப் பெறுவதற்காக அமெரிக்கா உக்ரைனை பெரும் தாக்குதல்களைத் திட்டமிட்டு செயல்படுத்த கட்டாயப்படுத்தியது. ஆயினும் இந்த தாக்குதல்கள் அனைத்தும் பேரழிவுகளை ஏற்படுத்தின.



## உக்ரைன் ஜெலென்ஸ்கி தோல்வி:

ஜெலென்ஸ்கியின் மேற்கத்திய ஆதரவாளர்கள் அவரைக் கைவிட்டு வருகின்றனர். மேலும் அவரது நேட்டோவுல் இணையும் திட்டமும் சரிவரவில்லை.

இப் போர் முடிவுக்கு வருவதற்கு உக்ரைனே பொறுப்பேற்க வேண்டும் என டிரம்ப் சொன்னதை அடுத்து உக்ரைனிய அரசு ஆடிப்போயுள்ளது.

ஜெலென்ஸ்கி செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். அவரது ஆட்சி காலத்தில் மக்கள் ஆதரவு எண்ணிக்கை பெரிதாக இல்லை என்றும் டிரம்ப் கூறியுள்ளார்.

மூன்று வருட போரில் உக்ரைனின் இராணுவம் பாரியளவில் அழிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட அரை மில்லியன் வீரர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் ஒரு மில்லியன் வீரர்கள் வரை காயமடைந்து உள்ளனர். பல லட்சக்கணக்கானோர் நிரந்தரமாக ஊனமுற்றனர். ஆனால் இந்த உண்மையே மிகவும் கொடூரமானது.

இதனால் என்ன பயன் என தெரியவில்லை என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார். ஜெலென்ஸ்கி ஒருபோதும் சாத்தியப்படாத நேட்டோ தலையீட்டை தக்க வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால் அவரது மக்கள் வெல்ல முடியாத போரை நடத்தி என்ன பயன் என்று கேள்வி எழுப்பினர்.

போரின் விளைவால் உக்ரைனின் பொருளாதாரம் பாரியளவில் சிதைந்துள்ளது. அதன் வர்த்தக உள்கட்டமைப்பு மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் உக்ரேனிய இராணுவம் தாக்குதல் வலுவானது குறைந்துள்ளது.

மேற்கத்திய தலைவர்கள் தங்கள் நாட்டின் ஆதரவை தூர விலக்கிக் கொள்கிறார்கள் என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்த மோதலில் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் நூற்றுக்கணக்கான பில்லியன்களை கொட்டி வீணாக்கின. ஆனாலும் உக்ரைன் தன் நிலத்தையும் உயிர்களையும் பலியிட்டு கண்ட பலன் ஏதுமில்லை.

புவிசார் அரசியல் விளையாட்டு களத்தில் உக்ரைன் தன்னை அநியாயமாக பலியிட்டுள்ளது. ஆனாலும் ஓர் உண்மையை மறுக்க முடியாது. நீண்ட காலம் இப் போர் தொடருமாயின், உக்ரைன் முழுமையாக சரணடைவதைக் காண வேண்டி வரும். அதனைத் தவிர்க்கவே அமெரிக்கா போரை நிரந்தரமாக நிறுத்த வேண்டும் முடிவை வலியுறுத்தி வருகிறது.

## அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாடு:

இப்போது உக்ரைனிய அரசு காணும் தோல்விக்கு நேரடியாக அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும்.

போர் உக்ரைனுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. இப்போரில் உக்ரைனை மேலும் மேலும் துருப்புக்களை முன்னணியில் ஈடுபடுத்த அமெரிக்க இராணுவ ஆலோசனைகளே என்றும் கூறப்பட்டது.

அதேவேளை நேட்டோ தொடர்ந்து உக்ரைனுக்குத் தேவையான குண்டுகள் மற்றும் வெடிமருந்துகளை வழங்கத் தவறிவிட்டது என்றும் உக்ரைனிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் இப்போரில் தோற்கும் என்பது தெளிவாகத் தெரிந்ததும், அமெரிக்கா சவுதி அரேபியாவில் திட்டமிட்டே "சமாதானப் பேச்சுவார்த்தைகளில்" ஈடுபட்டது. அதன் பின்னர் உக்ரைன் தரப்பை பேச்சு வார்த்தையில் இருந்தும் விலக்கியது.



மற்றோரு உண்மை என்னவென்றால் டிரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் - அமெரிக்கா உக்ரைனை மெதுவாக ஒதுக்கித் தள்ளி, அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கனிம சொத்துக்களை இழப்பீடு கோரியுள்ளது.

தற்போது மிகவும் அவமானமாக, ரஷ்யாவுடனான போருக்கு உக்ரைனையே குற்றம் சாட்டுகிறார் அதிபர் டிரம்ப். அவர்கள் இதையெல்லாம் நிறுத்த ஒரு ஒப்பந்தம் செய்திருக்கலாம் என்றும் கூறுகிறார். ஆனால் இந்த உண்மைகளை மூடி மறைத்தே அமெரிக்கா அடிக்கடி அமைதியைத் தடுத்தது, போரையும் தொடரச் செய்தது.

இப்போது ரஷ்யாவுடனான உறவை புதுப்பித்துக் கொள்ளும் அமைதிப் பேச்சுவார்த்தைகளில் உக்ரைனோ ஐரோப்பாவோ அழைக்கப்படவில்லை என்பது நேட்டோ நாடுகளின் கன்னத்தில் அறைந்தது போல் உள்ளது.

உக்ரைனின் தோல்விக்கான காரணங்களையும் தனது போக்கில் டிரம்ப் தெளிவுபடுத்தி உள்ளார். உக்ரைனின் பொருளாதாரம் பாரியளவில் சிதைந்துள்ளது. அதன் அரசின் உள்கட்டமைப்பு அழிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் பெரும் நிலப்பரப்பு ரஷ்யாவிடம் இழக்கப்பட்டுள்ளது. இந்த தேவையற்ற போரில் பல்லாயிரம் உக்ரைனிய வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

வரலாற்றில் இது ஒரு பாடமாக இருக்கட்டும். மேற்கத்திய முதலாளித்துவ அரசுகளுக்காக வக்காலத்து வாங்கி போராடும் போது இதுதான் நடக்கும்.



வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும் தற்போது உக்ரைனிலும் அமெரிக்கர்கள் தங்கள் வேலை முடிந்ததும் அவர்களை குப்பையில் எறிந்துவிட்டு அடுத்த இடத்திற்குச் சென்று விடுவார்கள். அமெரிக்கர்களுக்கு தேவை தங்கமும் தகரமும் தான். இதுவே துயரமிகு வரலாறாக தொடர்கிறது.




# அநுர அரசின் "பட்ஜெட்"டும் தமிழ் கட்சிகளின் முரண்பாடுகளும்

**"தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றுபட வேண்டும். தேர்தல்களில் ஓரணியாக போட்டியிட வேண்டும் என்ற வலியுறுத்தல்கள், கோரிக்கைகள் தொடர்ந்துவரும் நிலையில் அநுரகுமார அரசின் 2025ஆம் ஆண்டுக்கான "கன்னி" வரவு செலவுத்திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்பதில் கூட ஒன்றுபட மறுக்கும் இவர்கள் எப்படி புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழர் உரிமைநலன் சார்ந்து பாராளுமன்றத்தில் ஓரணியாக அழுத்தம் கொடுப்பார்கள்?"**

**- கே. பாலா -**

**தே**சிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான "கன்னி" வரவு செலவுத்திட்டத்தை (பட்ஜெட்) கடந்த பெப். 17 ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்து வரவு செலவுத்திட்ட உரையை ஆற்றிய நிலையில் வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 7 நாட்கள் இடம்பெற்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6.10 மணியளவில் விவாதம் நிறைவடைந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 109 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

2025 ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜீவன் தொண்டமான் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கியதேசியக்கட்சி, நாமல் ராஜபக்ச பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுன, ரவி கருணாநாயக்க பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய ஜனநாயக முன்னணி, திலித் ஜயவீர தலைமையிலான சர்வஜனசக்தி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் எதிர்த்து வாக்களித்தன. அதேநேரம் அரச தரப்பினருடன் இணைந்து ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி செல்வம் அடைக்கலநாதன் ஆதரவாக வாக்களித்து அதிர்ச்சியளித்தார்.

அதுமட்டுமல்ல அநுரகுமார அரசாங்கத்தின் இந்த வரவு செலவுத்திட்டத்தினை சிங்கள எதிர்க்கட்சிகள், அவற்றோடு பங்காளிகளான மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் எதிர்த்து வாக்களித்தபோது வழக்கம் போலவே "நவக்கிரகங்கள்" போல் இருக்கும், செயற்படும், முடிவுகளை எடுக்கும் தமிழ் தேசியக்கட்சிகள் அநுரகுமார அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்திலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு முடிவுகளை எடுத்து "நாம் எந்த விடயத்திலும் ஒற்றுமையாக முடிவுகளை எடுக்க மாட்டோம்" என்பதனை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ளன. அது எவ்வாறு என்பதனைப் பார்ப்போம்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான "கன்னி" வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 7 நாட்கள் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக்கட்சிகளினதும் தலைவர்கள், எம்.பி.க்கள் வரவு செலவுத்திட்டம் தொடர்பான விமர்சனங்களை முன்வைத்து உரையாற்றினர். எதிர்கட்சிகளை சேர்ந்த சிலர் கடுமையாக விமர்சித்தனர். சிலர் மேலோட்டமாக விமர்சித்தனர். இன்னும் சிலர் வரவு செலவுத்திட்டத்தில் என்ன உள்ளது என்ன இல்லை என்பது அவர்களுக்கே தெரியாமல் பேசினர். அரச தரப்பினர் வழக்கம் போலவே புகழ்ந்து தள்ளினர்.

இந்த வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் சிங்களக் கட்சிகளின் நிலைப்பாடுகளை விடுவோம். தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடுகளை மட்டும் பார்ப்போம். அந்தவகையில் இந்த வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு மாகாணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ள அநுரகுமார அரசாங்கம் வடக்கு போலவே யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட, முஸ்லிம்கள் அதிகம் வாழும் கிழக்கு மாகாணத்தை முற்றாக புறக்கணித்து விட்டதாக முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் எம்.பி.க்களும் கடுமையாக விமர்சித்ததுடன் வரவு செலவுத்திட்டத்தை தூக்கி எறிய வேண்டும் எனவும் கொந்தளித்தனர். மலையக தமிழ் அரசியல் கட்சிகளினது தலைவர்கள் எம்.பி.க்களும் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக விமர்சித்தனர். அவர்கள் தமது விமர்சனத்திற்கு நியாயம் கற்பிக்கும் வகையில் வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்.

தமிழ் தேசியக்கட்சிகளைப் பொறுத்தவரையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தலைவராகக்கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி அநுரகுமார அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தை விமர்சித்தது. இனவாதத்தால் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சிறந்த ஆரம்பத்தை அரசாங்கம் முன்வைக்கும் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக எதனையும் இதில் பார்க்க முடியவில்லை. ஜனாதிபதி குறிப்பிட்டவாறு வடக்கு, கிழக்கில் மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றே எதிர்பார்ந்தோம். இந்த மாகாணங்களுக்காக விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரையில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதை தவிர வேறு எந்த தெரிவுகளும் எமக்கு கிடையாது என்று அத தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உறுதிபடத்தெரிவித்ததுடன் வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்தும் வாக்களித்தார்.

அதேவேளை தமிழரசுக்கட்சியின் சார்பில் பேசிய பலரும் வரவு செலவுத்திட்டத்தை கடுமையாக விமர்சிக்கவோ எதிர்ப்போமெனக் கூறவோ இல்லை. கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. நிலையான அரசியல் தீர்வு ஊடாக மாத்திரமே எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றே கூறினார்கள். இதனால் வரவு செலவுத்திட்டத்தில் தமிழரசுக்கட்சி என்ன முடிவெடுக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்த நிலையில் வாக்களிப்பில் பங்கேற்காது தவிர்த்து விட்டனர்.

இந்த பங்கேற்காமையை எதிர்ப்பு என்றோ வாக்கெடுப்பு பகிஷ்கரிப்பு என்றோ நடுநிலை என்றோ கருத முடியாது. ஏனெனில் ஒன்று ஆதரவாக வாக்களிக்க வேண்டும் இல்லையெனில் எதிர்த்து வாக்களிக்க வேண்டும்.அல்லது சபையில் அமர்ந்திருந்தவாறு எதிர்த்தோ, ஆதரவாகவோ வாக்களிக்காது நடு நிலை என அறிவித்திருக்க வேண்டும். அல்லது வாக்கெடுப்பை பகிஸ்கரிக்கின்றோம் என் அறிவித்து விட்டாவது சபைக்கு வராதிருந்திருக்க வேண்டும். ஆனால் எந்த அறிவிப்பும் இல்லாது இவர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்காதது சபைக்கு சமூகமளிக்காதோர் என்ற பட்டியலில் மட்டுமே சேரும். எனவே தமிழரசுக்கட்சியினர் வாக்களிப்பில் பங்கேற்காமை விழலுக்கிறைத்த நீராகிவிட்டது.

ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி.யாகவுள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரான அடைக்கலநாதன் எப்போதும் "கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாக" இருப்பவர். எல்லோருக்கும் "ஆமாம் சாமி" சொல்லி "உங்களின் முடிவே எனது முடிவும்" "உங்களுக்கே எனது ஆதரவு", என்று சொல்லிவிட்டு தனது சொந்த இலாபம் கருதி முடிவுகளை எடுப்பவர். அதனால்தான் வரவு செலவுத்திட்டம்தொடர்பில் இறுதிவரை கள்ள மௌனத்தில் இருந்துவிட்டு சத்தமின்றி ஆதரவாக வாக்களித்துவிட்டு சென்று விட்டார்.

அடுத்தவரான சுயேச்சைக்குழு 17 இன் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யும் பிரபாகரனினதும் விடுதலைப் புலிகளினதும் பெயரைப் பயன்படுத்தி தன்னை ஒரு விடுதலைப் புலிகளின் தீவிர பற்றாளராக காட்டுபவரும் எந்தக்கொள்கையுமில்லாத, மாறாட்ட அரசியல் செய்பவருமான அர்ச்சுனா இராமநாதனும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. பாராளுமன்ற சம்பிரதாயங்கள். விதி முறைகள் நடைமுறைகள் தொடர்பில் எதுவுமே தெரியாத அர்ச்சுனா எம்.பி. வரவு செலவுத்திட்டத்தை ஜனாதிபதி சமர்ப்பித்த பெப்ரவரி 17 ஆம் திகதி மாலை இடம்பெற்ற உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்டமூல விவாதத்தில் பங்கேற்று அந்த விடயத்துக்கு புறம்பாக வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்து பேசினார். எதிர்க்கட்சிகள் பக்கத்தில் இந்த வரவு செலவுத்திட்டத்தை ஆதரிக்கும் ஒரேயொருவர் தான் மட்டுமே எனக்கூறி வரவு செலவுத்திட்டத்தை புகழ்ந்து தள்ளினார். உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்டமூலத்தை நிறைவேற்ற நடந்த வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்துவிட்டு தனது யூடியூப் சனலில் அநுரகுமார அரசின் வரவு செலவுத்திட்டம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டதாகவும் அதில் தான் ஆதரவாக வாக்களித்ததாகவும் கூறினார்.

அதாவது நடந்தது உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தல் திருத்த சட்டமூல விவாதம் என்பதை அறியாது. தான் எந்த சட்டமூலத்தை நிறைவேற்ற வாக்களித்தேன் என்பதுகூடத்தெரியாது வாக்களித்துவிட்டு அநுரகுமார அரசின் வரவு செலவுத்திட்டம் பெப்ரவரி 17 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டதாகவும் அதில் தான் ஆதரவாக வாக்களித்ததாகவும் முட்டாள்தனமாக கூறினார். பின்னர் அவர் வரவு செலவுத்திட்டத்தில் கடந்த திங்கட்கிழமை உரையாற்றுகையில் அநுரகுமார அரசையும் வரவு செலவுத்திட்டத்தையும் மிகக்கடுமையாக எதிர்த்து விமர்சித்தார். அரசு தமிழ் மக்களுக்கு பிச்சை போடுவதாகவும் வசைபாடினார், இந்நிலையில் வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் மீது பெப்ரவரி 25 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது அவர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. ஆகவே வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவா எதிர்ப்பா என்பதில் அர்ச்சுனாவுக்குள்ள குழப்ப நிலை போன்றே அவர் வாக்கெடுப்பில் பங்கேற்காமைக்கு என்ன காரணம் என்பது தொடர்பில் மக்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளில், தேர்தல் போட்டிகளில் தமிழ் தேசியக் கட்சிகளிடையில் ஏற்படும் குழப்பம், முரண்பாடுகள் போன்றே அநுரகுமார அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான "கன்னி" வரவு செலவுத்திட்டத்தை எதிர்ப்பதா ஆதரிப்பதா என்பதிலும் தமிழ் தேசியக் கட்சிகளிடையில் குழப்பநிலை, முரண்பாடுகள் ஏற்பட்டன. அதனால் தான் ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத்திட்டத்தை ஆதரித்தார். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்மபலம் எம்.பி. எதிர்த்தார். ஆதரவா எதிர்ப்பா என்பதனை இறுதிவரை அறிவிக்காத தமிழரசுக்கட்சி வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. வரவு செலவுத்திட்டத்தை முதல்நாளில் புகழ்ந்து தள்ளி தனது முழுமையான ஆதரவினைத் தெரிவித்த அர்ச்சுனா எம்.பி. பின்னர் வரவு செலவுத்திட்டத்தை கடுமையாக எதிர்த்து விமர்சித்து விட்டு வாக்கெடுப்பிலும் பங்கேற்கவில்லை.

எனவே ஒரு வரவு செலவுத்திட்டத்தில் கூட தமிழ் மக்கள் நலன் சார்ந்து ஒரே முடிவை எடுக்க முடியாத இந்த தமிழ்த்தேசிய கட்சிகளும் தலைவர்களும் எம்.பி.க்களும் தமிழ் மக்களின் பிரச்சினைக்காண தீர்வில் இவர்கள் எப்படி ஒன்றாக நிற்பார்கள், எப்படி ஒரே முடிவை எடுப்பார்கள், எப்படி ஒரே தீர்வைக் கோருவார்கள் என்பதே தமிழ் மக்களின் இன்றைய கேள்வியாகவுள்ளது.

# இலங்கையில் காலூன்றியது அமெரிக்காவின் Shell பெற்றோல் நிறுவனம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## இலங்கையின் வட மாகாணத்தில் 7 எரிபொருள் விற்பனை நிலையத்தில் அமெரிக்க பெற்றோல் Shell நிறுவனம் ஊடாக விற்பனை செய்யப்படவுள்ளது





- ந.லோகதயாளன்

வடக்கிலும் 7 எரிபொருள் விற்பனை நிலையங்களில் அமெரிக்க எரிபொருள் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று முன்தினம் அமெரிக்காவின் எரிபொருள் விற்பனை நிலையமான ளாநடட விற்பனை நிலையம் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜுலி செனங் திறந்து வைத்த அதேநேரம் இலங்கை முழுவதும் விரைவில் இதே கிளைகள் திறக்கப்படவுள்ளது.

இதற்கமைய வடக்கில் இருந்து முதல் கட்டமாக 7 எரிபொருள் நிலையங்கள் அமெரிக்க நிறுவனத்தின் கீழ் பதிவு செய்துள்ளன. அதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கைதடி, இருபாலை, புன்னாலைக்கட்டுவன் மற்றும் ஊறணிப் பகுதியில் உள்ள நான்கு எரிபொருள் விற்பனை நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் எஸ்.கே.நாதனின் எரிபொருள் விற்பனை நிலையமும், வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் கே.எம்.லியகத் அலி எரிபொருள் விற்பனை நிலையமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாஞ்சோலைப் பகுதியில் உள்ள மகேந்திரன் எரிபொருள் விற்பனை நிலையமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை எந்தவொரு எரிபொருள் விற்பனை நிலையமும் அங்கீகரிக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.



# பாடகி யோஹானியின் இசை நிகழ்விட்கு எதிராக பிரித்தானியாவில் கண்டன போராட்டம்!

உலக செய்திகள்
World News



21 மாசி 2025 அன்று பிரித்தனியாவில்லுள்ள 15 கேவென்டிஷ் சதுக்கத்தில் நடைபெற்ற, பாடகி யோஹானியின் இசை நிகழ்விற்கு எதிராக தமிழீழ சுயநிர்ணய அமைப்பினால் எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யோஹானியின் தந்தையான மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா அறிக்கையில் பெயரிடப்பட்ட 55 ஆவது பிரிவிற்கு தலைமை தாங்கியுள்ளார். அதனாலேயே யோஹானிக்கு எதிராக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை மோதிய வாகனம் மீட்பு!






கடந்த 21ஆம் திகதி கோப்பாய் சந்தியில் இருந்து கைதடி நோக்கி செல்லும் வீதியில், விபத்தினை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனமானது 26ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கைதடி - தச்சன்தோப்பு பகுதியில் வாகனமானது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கோப்பாய் பொலிஸாரால் இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேற்குறித்த திகதியன்று மரணச் சடங்கின் இறுதி ஊர்வலத்தில் ஈடுபட்டவர்களை இந்த வாகனம் மோதியதில் அறுவர் படுகாயமடைந்தனர். வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அவர்களை சேர்ப்பித்தவேளை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அன்றையதினம் இந்த வாகனத்தை செலுத்தியவரும், வாகனத்தின் உரிமையாளரும் கைது செய்யப்படவில்லை. வாகனத்தின் உரிமையாளர் கொழும்பில் இருப்பதாக தகவல் வெளியாகிய நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிறப்பாக இடம்பெற்ற மகா சிவராத்திரி நிகழ்வு

## பல இலட்சக்கணக்கான சிவ பக்தர்கள் பங்கேற்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (26-02-2025)





வரலாற்றுப் புகழ் பெற்ற நாயன்மார்கள் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான மகா சிவராத்திரி நிகழ்வு 26ம் திகதின்று புதன்கிழமை இடம்பெற்ற நிலையில் உலகம் முழுவதும் இருந்து பல லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் நேர்த்தி கடன்களை செலுத்த வருவதுடன் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இலங்கை மாத்திரம் இன்றி உலகம் முழுவதும் இருந்து வருகை தந்த சிவ பக்தர்கள் மன்னார் பாலாவ-ியில் நீராடி பாலாவி தீர்த்த நீரை திருக்கேதீஸ்வர ஆலயத்தில் உள்ள மகா சிவலிங்கத்திற்கு நீர் வார்த்து நெய் விளக்கு ஏற்றி வேண்டுதல்கள் மற்றும் நேர்த்திக்கடனை அன்று (26) அதிகாலை தொடக்கம் செலுத்தினர்.

மேலும் மகா சிவராத்திரி நிகழ்வை ஒட்டி விசேட போக்குவரத்து சேவைகள், குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளும் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் சிவராத்திரி நிகழ்வுகளை முன்னிட்டு திருக்கேதீஸ்வர திருப்பணி சபையின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட இந்து கலாச்சார நிகழ்வுகள் அறநெறி சொற்பொழிவு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அன்றைய தினம் இரவு விசேட பஜனைகள் மற்றும் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

அதே நேரம் இம்முறை சிவராத்திரி நிகழ்வுக்கு என விசேட பொலிஸ், இராணுவ அதிரடி படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது டன் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் இருந்து சுமார் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் சிவராத்திரி நிகழ்வில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் பனை மரங்கள் தறிப்பது தொடர்பான விடயங்கள் குறித்தான கலந்துரையாடல்!

பு. கஜிந்தன்



பனைமரம் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச்சட்டம் மற்றும் அனுமதி தொடர்பாகவும் தறிக்கப்படுகின்ற பனைமரங்களுக்கான மீள் நடுகை செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் செவ்வாய்க்கிழமை (25.02.2025) பி.ப 3.15 மணிக்கு மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் அவர்கள் அனர்த்தம் ஏற்படக்கூடிய பனைமரங்கள் காணப்படுமாயின் அவற்றினை ஐந்துபேர் கொண்ட குழுவொன்றினை அமைத்து அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு தறிப்பதற்கான அனுமதி வழங்குதற்கும், அரச வீட்டுத்திட்டம், அரசசார்பற்ற வீட்டுத்திட்டம் என்பவற்றினால் பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்படும் வீட்டுத்திட்டங்களுக்கு நிபந்தனைகளுடன் பனை மரம் தறிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும் பனை அபிவிருத்தி சபைக்கு ஆலோசனை வழங்கியதுடன், பனை அபிவிருத்தி சபையினால் யாழ் மாவட்டத்தில் பனம் விதை நடுவதற்கான இடங்கள் காணப்படுமாயின் அதற்கான இடஅமைவு தொடர்பான விடயத்தினை பிரதேச செயலாளர்களை அறிக்கையிடுமாறும் தெரிவித்தார்.





பனைமரம் தறிப்பதற்கான கட்டுப்பாட்டுச்சட்டம் மற்றும் அனுமதி தொடர்பாக பிரதேச செயலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான உடனடித் தீர்வுகள் தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டன.

மேலும் இக்கலந்துரையாலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. க.ஸ்ரீமோகனன், உதவி மாவட்ட செயலாளர் செல்வி. உ.தர்சினி, பிரதேச செயலாளர்கள், பனைஅபிவிருத்தி சபையின் முகாமையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சுயநலம் சார் அகப்புற முரண்பாடுகளை களைந்து ஐக்கியப்படுவோம்! வாரீர் — ஐக்கிய தமிழர் ஒன்றியம் அழைப்பு!

2025ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழ்த் தேசியத்தினதும் தமிழ் மக்களதும் நன்மை கருதி அனைத்துச் சுயேட்சைக் குழுக்களும் அரசியல் கட்சிகளும் ஐக்கியப்பட்டு ஒரு குடையின்கீழ் நின்று தேர்தலை எதிர்கொள்ளத் தயாராவோம் வாரீர் என 17 சுயேச்சைக்குழுக்களின் இணையமான ஐக்கிய தமிழர் ஒன்றிய கட்சி பகிரங்க அழைப்பு விடுக்கிறது.

இக்கட்சியின் தலைவர் N.P. ஸ்ரீந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது, இன்றைய அரசியல் கள நிலவரப்படி தமிழர்கள் ஐக்கியப்பட்டு நிற்பதையே இலங்கை வாழ் தமிழர்களும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களும் மிக ஆவலோடும் அக்கறையோடும் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர்.

தமிழ் மக்களின் இந்த நீண்ட கால எதிர்பார்க்கை இன்று காலத்தின் கட்டாயமாக இருப்பதை அனைத்து கட்சிகளும் உணர்வோம். இந்த எதிர்பார்க்கையை நிறைவேற்றுவது ஒவ்வொரு சுயேச்சை குழுக்களதும் அரசியல் கட்சிகளதும் தலையாய நோக்காக கடமையாக இருப்பதையும் உணர்வோம்.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது போல எங்களுக்குள் இருக்கும் சுயநலம் சார் அகப்புற முரண்பாடுகளை களைந்து பொதுநல நோக்கோடும் தூர நோக்கோடும் சிந்தித்து காலையில் உதிக்கும் புதிய சூரியன் போல் ஐக்கியப்பட்டு எழுந்து நிற்போம் வாரீர்.

இவ்வாறு ஐக்கியப்பட்டு ஒவ்வொரு தேர்தலிலும் நாம் நிற்போமானால் தென்பகுதி கட்சிகள் எம்மண்ணில் கால் ஊன்றுவதைத் தடுக்கலாம். தமிழ் வேட்பாளர்களும் வாக்காளர்களும் தமிழ்த் தேசிய உணர்வு இன்றி விலை போவதைத் தடுக்கலாம். நம் விரலை வைத்து நம் கண்ணை குத்தி குருடாக்கும் அந்நியத்தை தடுக்கலாம். தமிழ்த் தேசியம் வலுவிழக்காமல் சிதையாமல் இருப்பதற்கு இந்த தடுப்பு மிக அவசியம் என்பதை உணர்வோம்.

இந்த ஐக்கியப்பட்டு நிற்கும் அரிய சாதனைக்காக தமிழ் தேசியம் சார் கொள்கைக்காக தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்விற்காக அவர்களின் விடிவிற்காக ஐக்கிய தமிழர் ஒன்றியம் என்ற எமது கட்சி அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கு தயாராகவே உள்ளது. இதற்காக எமது கட்சி வீரமும் விவேகமும் அரசியல் அனுபவமும் நிறைந்த குழு ஒன்றை அமைத்துள்ளது.

தமிழ்த் தேசிய கட்சிகள் அழைப்பு விடும்பட்சத்தில் ஓடோடி வரக் காத்திருக்கின்றோம். ஒன்றுபட்டு தேர்தல் களத்தில் இறங்கி வெற்றி பெறுவதன் மூலம் தமிழர் வரலாற்றில் புதிய வரலாறு படைக்கலாம். இழந்த உரிமைகளை மீட்பதற்கு ஒன்றுபட்டு குரல் கொடுக்கலாம். இதற்கு பாரத தேசம் துணை நிற்கும் என நம்பலாம். காலம் கனியும். தமிழர் கனவு நனவாகும். வெல்லும் தமிழ் தேசியம் என அச்செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# இவ்வார ராசிபலன்

**28-02-2025 வெள்ளி தொடக்கம் 06-03-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** வாழ்க்கையில் முன்னேற்றம் தரும் வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். விரும்பியது நிறைவேறும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கை துணையால் வளம் பெருகும். பொருளாதாரம் மேம்படும். கடன் பாக்கிகள் வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. மனிதநேயம் மிகுதியாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உடல்நிலையில் கவனம் தேவை. சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் உண்டு. பழையக்கடன் தீரும். விபரீத எண்ணம் விலகும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். துணிவோடு செயல்படுவீர்கள். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெற்றோர் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**ரிஷபம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். உள்ளம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தன வரவுகள் தடைப்படும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சால் வீண் வம்பு அகலும். உடன்பிறப்பால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். உறவினர் ஒற்றுமை பலப்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். சாமார்த்தியமாக செயல்படுவீர்கள். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: வினை தீர்க்கும் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,8,5

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மிதுனம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பாராட்டுக்கள் கிடைக்கும். உத்தியோக வாய்ப்புண்டு. மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. சந்தோஷம் அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். மங்கள செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர் உற்சாகம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். கலைத்துறை ஆர்வம் கூடும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். குதூகலமான எண்ணம் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். பாராட்டக்கள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசையார்வம் கூடும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,6

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** எதிர்ப்புக்களால் பொறுப்பு கிடைக்கும் வாரம். விறுவிறுப்பான காலம். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். பெண்களுக்கு கவனம் தேவை. தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. குடும்ப கௌரவம் உயரும். நாட்பட்ட நோய்களுக்கு தீர்வு கிடைக்கும். நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு உண்டாகும். மனைவி சச்சரவுகள் தீரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். பொருள் இழப்பு ஏற்படும். புதிய வேலை முயற்சி பலன் தரும். உல்லாசப் பயணம் இனிக்கும். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**"ஜோதிட மகரிஷி"**
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068**
**9940431377**




**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். விவசாயிகள் பயன்பெறும் வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடவும். தெம்பும், தைரியமும் கூடும். உடல் நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். விவசாயிகள் பயன் பெறுவர். சகோதர வழியில் கவனம் தேவை. தர்மச்சிந்தனை மேலோங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் லாபம் புரளும். செல்வாக்கு மேம்படும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவுகள் கூடும். ஆடம்பரப் பொருள் சேரும். பெரியோர்களின் ஆதரவுப் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனம் மகிழும். பதவி உயர்வு தாமதமாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,7,1

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G




**கன்னி:** வகையான வாழ்வமையும் வாரம். உடல்பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதவியில் உயர்ந்த நிலை உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி நிலவும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். இரகசியம் காப்பது நல்லது. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆரோக்யம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சியில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பரால் இனிய செய்தி வந்தடையும். சுபவிரயம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புதியச் சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் திரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். கடன் விஷயத்தில் விடுதலைப் பெறுவீர்கள். செயல்களில் கவனமுடன் இருக்க வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். பிள்ளைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவுகள் ஏற்படும். நன்மைகள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**துலாம்:** பெண்களால் ஆதாயம் சேரும் வாரம். வறுமைகள் அகலும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. திருப்தி அதிகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தந்தையின் உடல் நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பாதகமான சூழ்நிழைலகள் விலகும். குடும்ப மேன்மைகள் உருவாகும். உடல்சோர்வு நீங்கும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். வெற்றி வீடு தேடி வரும். முத்தான வாய்ப்பு பெருகும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**விருச்சிகம்:** முத்தான வாய்ப்பு பெருகும் வாரம். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். விபரீத போக்கு மறையும். உறவினர் வருகையால் பலன் உண்டு. பெற்றோர்களின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டாகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். ஆன்மீக சிந்தனை கூடும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். வேண்டாத நபர் விலகுவர். பழையக்கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். திருப்புமுனையான காலம். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தக தொழில் லாபம் தரக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,1,3

அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T

(தொடர்ச்சி 22 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1135

## (வரலாறும் மரபும்)

## கதிர்காமம் முத்துலிங்கசுவாமி கோயில்

### (சிவன்கோயில்) கதிர்காமம்

*" அருந்துணையை அடியார்தம் அல்லல்தீர்க்கும்*
*அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி*
*வருந்துணையும் சுற்றமும் பற்றும்விட்டு*
*வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்*
*பொருந்தணைமேல் வரும் பயனைப் போக மாற்றிப்*
*பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்*
*பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்*
*பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. "*

எங்கும் நிறைந்தவன் இறைவன். இறை என்ற சொல் இறு என்ற பகுதி அடியாகப் பிறந்தது. சரம், அசரம் என்ற எல்லாப் பொருட்களிலும் தங்கியிருப்பவன் இறைவன். "பார்க்கு மிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே" என்றும், "அங்கிங்கென்னாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தி யாகி அருளொடு நிறைந்தது" என்றும், இறையின் தன்மை கூறப்பட்டுள்ளது. சைவசமயத்தின் முழுமுதற்கடவுளாகிய சிவனும், இவ்வாறாகத் தோன்றியும் தோன்றாப் பொருளாக, பாலில்படுநெய் போல யாவற்றிலும் மறைந்தும், பரந்தும், விரிந்தும் காணப்படுகின்றான்.

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என போற்றித்திருவகலிலே சிவனைப் போற்றித் துதிக்கும் மணிவாசகப் பெருமானின் வாக்குக்கள், சிவவழிபாட்டினை, சைவசித்தாந்த தத்துவங்களை உணர்த்தும் தன்மை கொண்டவை. இமயம் முதல் குமரிவரை பரந்திருந்த சிவ வழிபாடு, சீனா, யப்பான், சைபீரியா, கிழக்கிந்தியதீவுகள், அவுஸ்திரேலியா, மேற்கு ஐரோப்பிய நாடுகளான கிரீஸ், இத்தாலி, ஆபிரிக்க அமெரிக்கக் கண்டங்களிலும் அக்காலத்தில் பரவியிருந்தமையை எச்.எம். வெஸ்ட்ராப், பி டெய்லர், ஆலன் கிராண்ட் முதலிய மேனாட்டறிஞர்கள் ஆதாரத்தோடு விளக்கியுள்ளனர். தற்காலத்தில் புலம்பெயர்ந்து வாழும் இந்துக்கள், உலகெங்கிலும் பரந்து வாழ்வதால் சைவசயம் மேலும் புதுப்பொலிவோடு பரவியுள்ளது. சைவசமயத்தினையும், அதோடு தொடர்புடைய யோகா, தியானம் மற்றும் ஞானம் போன்றவற்றையும் கற்றறிந்து சைவத்தின் பெருமையை நிலைநாட்டுபவர்களாக மேலைத் தேயத்தினரும் இலங்கை, இந்திய ஞானிகளும் காணப்பட்டுள்ளனர்.

முன்னாளில் சிவவழிபாடே தனிவழிபாடாகக் காணப்பட்டுள்ளது. சான்றாக இந்தியாவிலும், ஈழத்திலுள்ள வரலாற்றிற்கு முற்றபட்ட ஈச்சவரங்களின் தொன்மையும் இதனை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. ஆரியர் வருகையின் பின்னர் சைவத்துடன் ஏனைய வழிபாடுகளும் கலந்து, வரலாற்றுப் பிணைப்பையும் பெயராகக் கொண்டு இந்துமதமாக மாற்றம் பெற்றது. செய்தொழிலால் வேறுபாடுகள் இருந்தபோதும், சிவவழிகாட்டால் சைவர் என்னும் ஒரு குலமாகத் திகழ்ந்தனர். திருமந்திரத்தின் வாக்குக்கமைய சைவர்கள் ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என தாயாக, தந்தையாக, எல்லாமாக சிவனை மட்டுமே வணங்கினர்.

வடநாட்டிலிருந்து வருகை தந்த கல்யாணகிரி சுவாமிகள், கதிர்காமத்திற்கு வருகைதந்து தவவாழ்க்கையை மேற்கொண்டவராக விளங்கினார். இவர் முருகனை மட்டுமன்றி, சிவன்மீதும் ஆராத பக்திகொண்டவராக விளங்கிளார். முற்றும் அறிந்த ஞானியாக விளங்கிய முத்துலிங்கசுவாமிகள் கொண்ட ஈடுபாட்டினால், கதிர்காமத்தில் சிவாலயம் அமைத்து, தொண்டாற்றி வந்துள்ளார். இச் சிவாலயம் கதிர்காம ஆலயத்தின் மேற்குத்திசையில் அமைந்து காணப்படுகின்றது.

அப்பரும், சுந்தரும், ஆளுடைப்பிள்ளையாரும், அருள் மாணிக்கவாசகரும் பொருளுணர்ந்து சிவனைப் பாடினரேயன்றி, ஏனைய தெய்வங்களைப் பாடவில்லை. ஆயினும் பின்னாளில் சண்மதக் கோட்பாடுகள் காரணமாக, முழுமுதற் கடவுளாகிய சிவனின் மூர்த்தி பேதங்கள் வகுக்கப்பட்டு வரையறை செய்து, அவரவர் தன்மைக்கேற்ப மக்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தியுள்ளனர். ஏன் இவ்வாறு வரையறுக்கப்பட்ட தென்பதற்கு,

" யாதொரு தெய்வம் கொண்டீர்
அத் தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார் "

என்ற சிவஞானசித்தியார் அருளிய அருள்வாக்கு பதில் உரைக்கின்றது. இந்தத் தத்துவத்தின்படியே தன்னை உயர்ந்து கொண்ட முத்துலிங்கசுவாமிகள் முருகவழிபாட்டிலும் பணிகள்பல செய்பவராகத் திகழ்ந்துள்ளார்.

கதிர்காமத்திலே வாழ்ந்த முத்துலிங்கசுவாமிகளும், பெரும் சித்தராக வாழ்ந்துள்ளார். சித்தத்தை சிவன்பால் வைத்தவர்களாக சித்தத்தை வென்றவர்களாக, உலக நன்மைக்கு உதவியவர்களாக சித்தர் பெருமக்கள் வாழ்ந்துள்ளனர். சித்தர்கள் என்பவர்கள் யார்? சித்தர் இனம் நீண்ட நெடுங்காலமாக எல்லா இனங்களிடையேயும் அருள் பரப்பிக் காணப்படுகின்றது. "மூலன் மரபில் வந்த நான் ஒரு சித்தன்" என பாரதி தன்னைச் சித்தர் பரம்பரையில் இணைத்துக்கொண்டு புகழ் பரப்பியுள்ளார். புட'டினத்தாரும் தாயுமானவரும் வள்ளலாரும் சித்தர் தத்துவங்களைக் கோட்பாடுகளாக்கிக் கொடுத்துள்ளனர் என்பதை அவர்கள் படைத்த இலக்கியங்களிலே காணலாம். சித்தர்கள் உடம்பின் வெளிப்பாடுகளை மறந்து உள்ளொளி பெற்றவர்களாகக் காணப்பட்டதோடு, ஊருக்கும் உபதேசம் செய்யும் தன்மைகொண்ட மெஞ்ஞானிகளாகவும் விளங்கினர்.

*வளரும்...*



# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப வளர்ச்சி கூடும். கௌரவமான காலம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். ஆரோக்யம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கணவன், மனைவி உறவு நீடிக்கும். மருத்துவச் செலவில் திருப்தி அடைவீர். மகான்களின் சந்திப்பு கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். பாதகம் விலகும். முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளிடத்தில் முன்னேற்றம் உண்டு. கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். வேண்டாத விஷயங்கள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மன சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாயில்தேடி வாய்ப்பு வரும். காரிய தாமதம் ஏற்படும். எதிர்கால எண்ணம் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: *5,4,1,3*
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**மகரம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். போட்டிகள் குறையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்யம் கவனம் தேவை. வியாபாரத்தடை ஏற்படும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். சாதகமான காலம். கௌரவமான தருணம். கன்னிப் பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியிடம் பாராட்டு கிடைக்கும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். மரத்தொழில் லாபம் தரும். நன்மையான விஷயங்களை தொடாவீர்கள். முதுகில் வலி வந்து நீங்கும். மனபயம் நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *6,9,3,2*
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**கும்பம்:** நன்மைகள் நாடி வரும் வாரம். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. சம்பள உயர்வு உண்டு. சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புக்கள் கூடும். வியாபாரம் செழிக்கும். சாதுர்யமான காலம். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். பணவரவு பெருகும். அற்புத வாய்ப்பு கிட்டும். குடும்ப பிரச்சனைகள் தீரும். தேவைகள் நிறைவேறும். உடல் வலியிலிருந்து விடுதலை அடைவீர். எதிர்ப்புகள் விலகும். மெத்தனப்போக்கு விலகும். பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். நினைத்த வி'யங்களில் வெற்றி நிகழும். பொன்னான நேரம் உங்களை வந்தடையும். பிள்ளைகளிடத்தில் உங்கள் அன்பு அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் வளம் கூடும். மேலதிகாரயின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: *5,3,9,7*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**மீனம்:** உயர்வு பெறும் வாரம். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். கலைத்தொழிலில் கவனம் தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. நட்டமில்லாத நன்மை தரும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். குடும்ப வளர்ச்சி பெருகும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் கூடும். மன அமைதி உண்டாகும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: *1,5,4,9*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H

கனடிய செய்திகள்
Canadian News

# ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் போல் ஐன்ஸ்லி மத்திய அரசின் அதிவேக ரயில் திட்ட அறிவிப்பை வரவேற்கிறார்

## Toronto Councillor Paul Ainslie Welcomes Federal Government's High-Speed Rail Announcement




19, 2025 அன்று கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் வெளியிடப்பட்ட இந்த திட்டம், கியூபெக்-டோரண்டோ இணைப்புப் பயணத்தில் புரட்சியை ஏற்படுத்துவதாக உறுதியளிக்கிறது.

"இது கனேடிய உள்கட்டமைப்பு மற்றும் நிலையான போக்குவரத்துக்கு ஒரு நினைவுச்சின்னம் போன்ற ஒரு படியாகும்" என்று கவுன்சிலர் ஐன்ஸ்லி கூறினார். "இந்த திட்டம், அதன் 1,000 கிலோமீட்டர் எலக்ட்ரிக் ரெயில் நெட்வொர்க் மற்றும் ஒரு மணி நேரத்திற்கு 300 கிலோமீட்டர் வரை வேகத்துடன், பயண நேரங்களை கணிசமாகக் குறைக்கும் மற்றும் எங்கள் முக்கிய நகரங்களுக்கிடையில் பொருளாதார மற்றும் கலாச்சார இணைப்பை அதிகரிக்கும்."

கவுன்சிலர் ஐன்ஸ்லி அவர்கள் இந்த அதிவேக ரெயிலுக்கு குரல் கொடுக்கும் சட்டத்தரணியாக இருந்து வருகிறார், இதற்கு முன்னர் அவர் ரொறன்ரோ நகர சபையில் ஒரு பிரேரணையை நிறைவேற்றினார், மொன்றியால் நகரத்தை அடையும் வகையில் கியூபெக் - ரொறன்ரோ பயணப் பாதையில் ஒரு அதிவேக ரயிலுக்கு அழைப்பு விடுத்தார். ஓஷாவா நகர சபையாலும் இந்த திட்டம் ஆதரிக்கப்பட்ட இந்த பிரேரணை, கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வைக் குறைப்பதிலும், காற்று மற்றும் ஆட்டோமொபைல் பயணங்களுக்கு ஒரு சாத்தியமான மாற்றீட்டை வழங்குவதிலும் அதிவேக ரயிலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது என்று குறிப்பிடலாம்.

"அதிவேக ரெயில்த் திட்டத்தை தொடர எடுத்த எமது முடிவு நாங்கள் வென்ற பார்வையுடன் சரியாக ஒத்துப்போகிறது" என்று 24ம் வட்டாரம் ஸ்காபுறோ -கில்கவுன்சிலர் ஐன்ஸ்லி கூறினார். "ஒரு உண்மையான அதிவேக ரயில் பயணத் திட்டம் அமைப்பு, மொன்றியால் மற்றும் ரொறன்ரோவுக்கு இடையில் பயண நேரத்தை ஏறக்குறைய மூன்று மணி நேரம் வரை குறைக்கும் திறன் கொண்டது, அத்துடன் இந்த திட்டமானது உண்மையான போட்டியை வழங்கும் அத்துடன் நிலையான போக்குவரத்தை நோக்கி மாற்றுவதை ஊக்குவிக்கும்."

கியூபெக்-ரொறன்ரோ குறுகிய நேரப் பயணத்திற்கு அப்பால், கவுன்சிலர் ஐன்ஸ்லியும் ரொறன்ரோவிற்கும் நியூயார்க் நகரத்திற்கும் இடையில் அதிவேக ரெயிலுக்கு ஆதரவாக நகர சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். "ஆல்டோ" திட்டம் வட அமெரிக்கா முழுவதும் எதிர்கால அதிவேக ரயில் முயற்சிகளுக்கு ஒரு ஊக்கியாக இருக்கும் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார்.

""ஆல்டோ" திட்டம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும், மேலும் கனடாவிலும் அதற்கு அப்பாலும் அதிவேக ரெயிலை மேலும் விரிவுபடுத்துவதற்கு இது வழி வகுக்கும் என்று நான் நம்புகிறேன்," என்று கூறி கவுன்சிலர் ஐன்ஸ்லி முடித்தார். "டொராண்டோவை அமெரிக்காவின் முக்கிய நகரங்களுடன் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை கற்பனை செய்து, நமது பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளை மேலும் மேம்படுத்துகிறது."

மேலதிக விபரங்களுக்கு: 416-392-4008
councillor_ainslie@toronto.ca ஆகிய வழிகளில் நகர சபைக் அங்கத்தவரை தொடர்பு கொள்ளலாம்

------------------------------------------

Toronto, ON - Today, Councillor Paul Ainslie welcomes the federal government's announcement of the "Alto" high-speed rail project, connecting Toronto to Quebec City. The project, unveiled by Prime Minister Justin Trudeau on February 19, 2025, promises to revolutionize travel within the Quebec-Toronto corridor.

"This is a monumental step forward for Canadian infrastructure and sustainable transportation," said Councillor Ainslie. "The project, with its 1,000-kilometer electric rail network and speeds of up to 300 kilometers per hour, will significantly reduce travel times and boost economic and cultural connectivity between our major cities."

Councillor Ainslie has been a vocal advocate for high-speed rail, having previously passed a motion at City Council to support City of Montreal's calling for a high-speed train in the Quebec - Toronto corridor, rather than a high-frequency train. This motion, which was also supported by Oshawa City Council, emphasized the importance of high-speed rail in reducing greenhouse gas emissions and providing a viable alternative to air and automobile travel.

"The decision to pursue high-speed rail aligns perfectly with the vision we championed," Councillor Ainslie stated. "A true high-speed system, capable of reducing travel time between Montreal and Toronto to approximately three hours, will offer real competition and encourage a shift towards sustainable transportation."

Beyond the Quebec-Toronto corridor, Councillor Ainslie has also recently passed a motion at City Council to support high-speed rail between Toronto and New York City. He expressed his hope that the "Alto" project will serve as a catalyst for future high-speed rail initiatives across North America.

"The 'Alto' project is a significant milestone, and I am confident that it will pave the way for further expansion of high-speed rail in Canada and beyond," Councillor Ainslie concluded. "Imagine the possibilities of connecting Toronto to major cities in the United States, further enhancing our economic and cultural ties."

For More Information:
Paul W. Ainslie, Toronto City Councillor
Ward 24, Scarborough-Guildwood
416-392-4008 councillor_ainslie@toronto.ca



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI

Pawn Brokers



30

வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

Pawn Bank Inc.™

Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2

416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2

416 754 7198

மொன்றியல் நகரில்

உதயன் UTHAYAN

விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.

FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record

PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000

416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1508 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 28, 2025

# ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் போல் ஏன்ஸ்லி மத்திய அரசின் அதிவேக ரயில் திட்ட அறிவிப்பை வரவேற்கிறார்

## Toronto Councillor Paul Ainslie Welcomes Federal Government's High-Speed Rail Announcement



19-02-2025 அன்று கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் வெளியிடப்பட்ட இந்த திட்டம், கியூபெக்-ரொறன்ரோ இணைப்புப் பயணத்தில் புரட்சியை ஏற்படுத்துவதாக உறுதியளிக்கிறது.

"இது கனேடிய உள்கட்டமைப்பு மற்றும் நிலையான போக்குவரத்துக்கு ஒரு நினைவுச்சின்னம் போன்ற ஒரு படியாகும்" என்று கவுன்சிலர் ஐன்ஸ்லி கூறினார். "இந்த திட்டம், அதன் 1,000 கிலோமீட்டர் எலக்ட்ரிக் ரெயில் நெட்வொர்க் மற்றும் ஒரு மணி நேரத்திற்கு 300 கிலோமீட்டர் வரை வேகத்துடன், பயண நேரங்களை கணிசமாகக் குறைக்கும் மற்றும் எங்கள் முக்கிய நகரங்களுக்கிடையில் பொருளாதார மற்றும் கலாச்சார இணைப்பை அதிகரிக்கும்."

கவுன்சிலர் ஐன்ஸ்லி அவர்கள் இந்த அதிவேக ரெயிலுக்கு குரல் கொடுக்கும் சட்ட த்தரணியாக இருந்து வருகிறார், இதற்கு முன்னர் அவர் ரொறன்ரோ நகர சபையில் ஒரு பிரேரணையை நிறைவேற்றினார், மொன்றியால் நகரத்தை அடையும் வகையில் கியூபெக் - ரொறன்ரோ பயணப் பாதையில் ஒரு அதிவேக ரயிலுக்கு அழைப்பு விடுத்தார். (தொடர்ச்சி 22ம் பக்கம்)

# "முன்னைய அரசாங்கங்கள் செய்ததைப் போலவே நீங்களும் செய்வீர்களாயின் தவறிழைக்கிறீர்கள் என்பதே அர்த்தமாகும்".

## பெப்ரவரி 27ம் திகதி வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் இலங்கை நாடாளுமன்றில் ஆற்றிய உரையின்போது தெரிவிப்பு



27.02.2025 ம் திகதியன்று வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் ஆற்றிய உரையில் "மாற்றத்தின் போது தலையீடு குறித்து விவாதிக்கப்படும் விடயங்களில் ஜனாதிபதி நம்பகத்தன்மையுடன் இருக்க வேண்டுமானால் அவர் இதனை உறுதிப்படுத்த வேண்டும். இந்த அரசாங்கம் உண்மையில் அந்த அமைப்பு மாற்றத்தை கொண்டு வரப் போகிறது என்று வடக்கு கிழக்கு மக்கள் உண்மையாக நம்பவேண்டும். அப்படியில்லையாயின் நீங்கள் அமைப்பு மாற்றம் என்று சொல்ல முடியாது. முந்தைய அரசாங்கங்கள் செய்ததைப் போலவே நீங்களும் செய்வீர்களாயின் தவறிழைக்கிறீர்கள் என்பதே அர்த்தமாகும்." என்று அழுத்தமாகக் குறிப்பிட்டார். (தொடர்ச்சி 10ம் பக்கம்)

# எமது மொழியினதும் பண்பாட்டுக் கோலங்களினதும் தொன்மையை ஆசிரியர்களோடு இணைந்து கொண்டாடுவதில் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும்

## ஒன்றாரியோ தமிழாசிரியர்கள் சங்கத்தினர் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" நிகழ்வில் உரையாற்றிய "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்





ஈழத்தமிழர்களாகிய நாம் மாத்திரமல்ல, உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவருமே தங்கள் ஆசிரியர்களையும் பெற்றோரையும் மதிக்கின்றவர்களாக விளங்குகின்றார்கள். எனவே இன்றைய "தமிழர் மரபுரிமை மாதம்" நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கின்ற ஒன்றாரியோ தமிழாசிரியர்கள் சங்கத்தினர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரோடு இணைந்து கொண்டாடுவது மிகவும் உகந்ததான காரணமாக விளங்குகின்றது. இவ்வாறான விழாவில். எமது மொழியினதும் பண்பாட்டுக் கோலங்களினதும் தொன்மையையும் இன்று வரையிலுமான தொடர்ச்சியையும் ஆசிரியப் பெருந்தகைகளோடு இணைந்து கொண்டாடுவதில் நாம் அனைவரும் பெருமிதம் கொள்ள வேண்டும்"

இவ்வாறு கடந்த வாரம் நடைபெற்ற ஒன்றாரியோ தமிழாசிரியர்கள் சங்கத்தினர் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய "கனடா உதயன்" பிரதம ஆசிரியரும் கனடா-பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உபு தலைவருமான ஆர். என் லோகேந்திரலிங்கம் புகழாரம் புகழாரம் சூட்டினார்.
(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# தமிழோசை ஆனந்தி : தாயக அவலங்களை உலகிற்கு வெளிப்படுத்திய ஒலிபரப்பாளர்!



கொடூரமான போர் நடந்த காலத்தில் துணிகரமான தாயகம் வந்து இலங்கையின் அரச படைகளின் தடைகளைச் சமாளித்தும் மீறியும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்புப் பகுதிக்கு வந்த "தமிழோசை ஆனந்தி" அவர்கள் யாழ்ப்பாணத்தில் தேசியத் தலைவர் பிரபாகரனை சந்தித்தார். பலருக்கும் நினைவிருக்கும் அவருடைய நேர்காணலை உலகெங்கும் தமிழ் மக்கள் பார்த்து வியந்தனர். அந்த நேர்காணலின் பின்னரே பிரபாகரன் ஒரு அதிசயப் பிறவி என்றார் பிபிசி புகழ் ஆனந்தி அக்கா. -------------------------------------------------------------------

தமிழ் ஒலிபரப்பு துறையில் ஒரு முன்னோடியாக இருந்த "ஆனந்தி அக்கா" பிபிசி தமிழ் சேவையில் இணைந்த முதல் தமிழ்ப் பெண்மணியாக பல தடைகளைத் தாண்டி பிபிசி தமிழோசையின் இயக்குநராக உயர்ந்த பெருமைக்குரியவர். பல ஆண்டுகளாக தாயக மக்களுக்கு செய்திச் சேவையை தொடர்ந்து வழங்கி வந்த பிபிசி "ஆனந்தி அக்கா" பெப்ரவரி 21இல் இலண்டனில் இயற்கை எய்தினார்.

# அநுர அரசின் "பட்ஜெட்"டும் தமிழ் கட்சிகளின் முரண்பாடுகளும்



"“தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றுபட வேண்டும். தேர்தல்களில் ஓரணியாக போட்டியிட வேண்டும் என்ற வலியுறுத்தல்கள், கோரிக்கைகள் தொடர்ந்துவரும் நிலையில் அநுரகுமார அரசின் 2025ஆம் ஆண்டுக்கான "“கன்னி"“ வரவு செலவுத்திட்டத்தை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்பதில் கூட ஒன்றுபட மறுக்கும் இவர்கள் எப்படி புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் தமிழர் உரிமைநலன் சார்ந்து பாராளுமன்றத்தில் ஓரணியாக அழுத்தம் கொடுப்பார்கள்?"“

கே.பாலா

(தொடர்ச்சி 17ம் பக்கம்)